# மள்ளர் மலர்

• ஆசிரியர் : பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் • மலர் 11 • இதழ் 4 • ஏப்ரல் 2005 •

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம்

## கானாடு 108 ஊர்த் தேவேந்திரர்களின்

### குடும்பு ஆட்சி முறை விழா



இளஞ்சாவூர் முத்து மாரியம்மன்
8 - ஆம் மண்டகப்படித் திருவிழா தேவேந்திரர்களின்
குதிரை வாகனத்தில் முத்து மாரியம்மன் வீதி உலா

செய்தி உள்ளே . . .

## ஏப்ரல் 2005 – மள்ளர் மலர் – பொருளடக்கம்


பக்கம்

- தேவேந்திர குல மள்ளர் உறவின் முறை 2
- நக்கீரனின் ஃப்ளாஷ் நியூஸ் (மின்னல்ச் செய்தி) 3
- சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையைத் தோற்றுவித்த தேவேந்திரர்கள் - தே. இராஜசேகரன் 4
- பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள், கி.பி. 3 - ஆம் நூற்றாண்டுக் குடும்பியர் - பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் 10
- அன்புள்ள ஆசிரியருக்கு 13
- புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் கானாடு 108 ஊர்த் தேவேந்திரர் (குடும்பர்) (குடும்பு ஆட்சி முறை) இளஞ்சாவூர் முத்துமாரியம்மன் கோயில் திருவிழா 14
- இலக்கியத் தொடர் - செங்கோட்டுப் பள்ளு 19
- ஈரோடு பெரிய அக்கிரகாரம் வாணியம்மன் கோயில் பண்ணாடி கல்வெட்டு 22
- தமிழ்ப் பாதுகாப்பு ஊர்திப் பயணம் - மூன்றாவது மொழிப்போர் அறிவிப்பு மாநாடு 24


## தேவேந்திர குல மள்ளர் உறவின் முறை

காரைக்குடியில் 20.2.2005 அன்று 2004 மார்ச்சில் நடைபெற்ற 10, மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் சிவகங்கை மாவட்டத்தில் அதிக மதிப்பெண் வாங்கிய மாணவ, மாணவியர்களுக்குத் தங்கப்பதக்கமும், பரிசுகளும், பாராட்டுகளும் வழங்கும் விழா காரைக்குடி தேவேந்திர குல மள்ளர் உறவின் முறை சார்பாக மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு தேவேந்திர குல மள்ளர் உறவின் முறை தலைவர் டாக்டர். V. சேது M.B.B.S., தலைமை தாங்கி வரவேற்றுப் பேசினார்.




சமுதாயத் தலைவர்கள், பரிசு பெற்ற மாணவ மாணவியருடன் பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர், மருத்துவர் சேது, மருத்துவர் தேவகோட்டை ம. சுப்பிரமணியம்

வீறுகொண்ட வேங்கையாக, யாருக்கும் எதற்கும் அஞ்சா நெஞ்சுடனும், கொள்கைப்பிடிப்புடனும் நமக்கெல்லாம் வழிகாட்டியாக நடமாடும் வரலாற்று அறிஞராக தேவேந்திர குலத்தின் காவலராக செயல்படும் மள்ளர் மலர் ஆசிரியரும் தேவேந்திர குல வேளாளர் சங்க மாநிலத் தலைவருமான திருமிகு முனைவர் குருசாமி சித்தர் அவர்கள் 12 ஆம் வகுப்பு, மாணவ, மாணவிகளுக்கு தங்கப் பதக்கங்களையும், பரிசுப் புத்தகங்களையும் வழங்கி எழுச்சிமிகு சிறப்புரையாற்றினார். தேவேந்திரர் சமுதாயத்திற்காக நீண்ட நெடுங்காலமாக தன்னை அர்ப்பணித்து வரும் சமூகக் காவலர் தேவ கோட்டை டாக்டர் M. சுப்பிரமணியம் அவர்கள் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணிவகளுக்கு தங்கப்பதக்கங்களையும், பரிசுப் புத்தகங்களையும் வழங்கி உணர்ச்சிமிகு சிறப்புரையாற்றினார்.

உறவின் முறை அமைப்பாளர் திரு. கணேசன் அவர்கள் மற்றும் முனைவர் திரு. பாண்டி அவர்கள், திரு. சந்திரன் அவர்கள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிச் சிறப்புரையாற்றினார்கள். விழாவிற்கு திருமயம் 108 பட்டி நாட்டுத் தலைவர் திருமிகு கு.ம. சுப்பையா அவர்கள், மதுரை தேவேந்திரர் தன்னார்வ அறக்கட்டளைத் தலைவர் திருமிகு மா. தங்கராஜ் அவர்கள், தஞ்சாவூர் மாவட்ட தேவேந்திர குலத் தலைவர் திருமிகு வீ. தட்சிணாமூர்த்தி அவர்கள் சிவகங்கை மாவட்டத் தலைவர் மா. பாண்டி அவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

அட்வகேட் திருமிகு கருணாநிதி அவர்கள், திருமிகு அருணாசலம் அவர்கள் திருமிகு வி. சுந்தர்ராஜ் அவர்கள், திருமிகு குணாகாடு ராமசாமி அவர்கள், திருமிகு குருதிவேல் மாறன் அவர்கள், வேட்டைக்காரன் பட்டி திருமிகு வெள்ளைச்சாமி அவர்கள் மற்றும் உறவின்முறை அங்கத்தினர்களும், காரைக்குடி நகரம், மற்றும் சுற்று வட்டாரக் கிராம மள்ளர் இன மக்களும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர். உறவின் முறை செயலாளர் திருமிகு வடிவேல் அவர்கள் நன்றி கூற விழா சிறப்புடன் இனிதே முடிவுற்றது.


நெல்லின் மக்களின் மகுட மணிக் கதிர்

**மள்ளர் மலர்**

மலர் 11 இதழ் 4

மேழம், திருவள்ளுவர் ஆண்டு 2036

பார்த்திப– சித்திரை, ஏப்ரல் 2005

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 120/–

வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,500/–

தனி இதழ் : ரூ. 10/–

அலுவலக முகவரி

10/2 நால்வர் நகர், பாரதியார் பல்கலைக் கழகம் (அஞ்சல்)

கோயமுத்தூர் – 641 046

தொலைபேசி : 0422–2422287

தொலைநகல் : 0422–2425300

மின் அஞ்சல்: mallarmalar@yahoo.com

ஆசிரியர்

முனைவர் குருசாமி சித்தர்

B.E., M.Sc.(Engg), Ph.D. (UConn-USA)

துணை ஆசிரியர்கள்

குரு. சித். செந்தில்குமார்

B.E., M.S., (TTU - USA)

மா. ராஜ்குமார் தேவேந்திரர் B.B.M.

மா. சிவக்குமார் தேவேந்திரர் B.E.

தேவேந்திர குல வேளாளர் சங்கத்திற்காக மா மன்னர் அச்சகம், கோவை-46 - இல் திருமதி துளசிமணி மாரியப்பன் அவர்களால் அச்சிடப்பட்டது. வெளியிடுபவர் டாக்டர் குருசாமி சித்தர்


## நக்கீரனின் ஃப்ளாஷ் நியூஸ் (மின்னல்ச் செய்தி)

நக்கீரன் மார்ச் 31 - ஏப்ரல் 2, 2005 இதழில் 17 - ஆம் பக்கத்தில் ஃப்ளாஷ் நியூஸ் (மின்னல்ச் செய்தி) என்ற தலைப்பில் சோழ மன்னர்கள் பரம்பரை பற்றிய விவாதம் பற்றிக் கூறுகிறது. 'சோழர்கள் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆய்வுகள் வெளிவந்த நிலையில், முன்னாள் தொல்பொருள் துறை இயக்குநர் நடன காசிநாதன் தனது ஆய்வு முடிவில் சோழ மன்னர்கள் வன்னிய குல சத்திரியர்கள் வம்சத்தவர்கள் எனக் கண்டறிந்து தனது ஆய்வுகளை டாக்டர் ராமதாசிடம் கொடுத்திருக்கிறாராம்' எனக் கூறுகிறது நக்கீரன்.

வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்துக் கொள்கிற தொல்லியல், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியங்கள் முதலிய சான்றுகள் இல்லாமல் ந.மு. வேங்கடசாமி நாட்டார் கள்ளர் சரித்திரத்தில் சோழர்கள் கள்ளர் குலத்தவர் எனக் கூறினார். நடன காசிநாதன் 'பள்ளர் (தேவேந்திரர்) பள்ளி (வன்னியர்) உறவு - சிறு விளக்கம்' என்னும் தன்னுடைய கட்டுரையில் (மள்ளர் மலர், டிசம்பர் 2004 பக்கம் 14 - 15) தேவேந்திரருக்கும் வன்னியருக்குமான வேற்றுமைகளைக் குறிக்கும் போது "பள்ளர் சேர, சோழ, பாண்டியன் என்கிற மூவேந்தர்களுக்கும் மருமகன்" என்று கூறுகிறார்.

குடுமி, குடுமிச்சி, குடும்பன், மள்ளர், மல்லர் என்று தேவேந்திர குல வேளாளர்களைக் குறிக்கும் குலக் குறியீட்டுச் சொற்களே கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும், இலக்கியங்களிலும் தமிழ் மூவேந்தர்களைக் குறிக்கின்றன என்பதை அறிஞர் இரா. தேவ ஆசிர்வாதம், பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் முதலியோர் எடுத்துக் காட்டியுள்ளனர். இச்செய்திகள் 1977லிருந்து நூல்கள் மூலமும் மள்ளர் மலர் திங்களிதழ் மூலமும் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் நக்கீரன் இவைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு தேவரையும் வன்னியரையும் மட்டும் குறிப்பிடுகிறது. தமிழ் மூவேந்தர்கள் மருதநிலத் தலைமக்கள், நெல்லின் மக்கள் என்பது தேவரையும் வன்னியரையும் இந்தப் போட்டியிலிருந்து விலக்கிவிடுகிறது. மருதநில முதுகுடி மக்களான தேவேந்திரர்களே தமிழ் மூவேந்தர் மரபினர், (முதுகுடுமி).

நக்கிரன் கூறுவது போல் தமிழ் மூவேந்தர் மரபினரை அடையாளங் காணும் இந்த ஆய்வுகள் மேலும் தீவிரமாக்கப்பட வேண்டும். இல்லையென்றால் தமிழர்களல்லாத தெலுங்கர் கட்டபொம்மனை வீரபாண்டியன் என்றும் உருது முஸ்லீம் ஆர்க்காடு நவாபை ஆர்க்காடு இளவரசர் என்றும் மராட்டியர் போன்ஸ்லேயை தஞ்சைப் பெருவுடையார் கோயில் பரம்பரை அறங்காவலர் என்றும் கூறும் அவலங்கள் தொடரும். இந்த மள்ளர் மலரில் 10 - ஆம் பக்கம் உள்ள பூலாங்குறிச்சிக் கல்வெட்டுச் செய்தியைப் படியுங்கள்.

# சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையைத் தோற்றுவித்த தேவேந்திரர்கள்

தே. இராஜசேகரன் பீ.இ,

இதுவரை தமிழக வரலாறு எழுதிய எந்த ஒரு வரலாற்று ஆசிரியரும் முறைப்படி வரலாற்றை பதிவு செய்யவில்லை. தமிழக வரலாற்று அறிஞர்கள் பலரும் ஒருவர் எழுதிய நூலைப் படித்து அதில் தத்தம் சமூக அடையாளங்களை கண்டு மேலும் மேலும் தங்களுக்கு போலி சமூக உயர்வு தேடிக் கொண்டனரே! தவிர யாரும் தமிழகத்தில் நேரடியாக சென்று களப்பணி செய்ததாகத் தெரியவில்லை. முந்தைய வரலாற்று அறிஞர்கள் எழுதிய நூல்களை படித்தும், தத்தம் சமூக செய்திகளை மட்டும் மேம்படுத்தியும் எழுதி வந்திருக்கின்றனர். தமிழக வரலாறு எழுதியவர்கள் ஒவ்வொரு தமிழ்ச் சமூக குடியிருப்பிற்கும் சென்று ஆய்வு செய்யவே இல்லை. மாறாக 80 ஆண்டுகளுக்கு முன்பு எழுத்து மற்றும் கல்வி, ஆட்சி துறைகளில் அதிகார ஆதிக்கம் செலுத்திய ஒரு சில குறிப்பிட்ட சமூக வரலாற்று எழுத்தாளர்கள் தத்தம் சமூக வளர்ச்சி கருதியும், தம் சமூகம் பின்னாளில் மேம்பாடையவும் தமிழ் மூவேந்தர்களின் வழி வந்த தேவேந்திர குல மள்ளர்களின் வரலாற்றை பழித்தும், இருட்டடிப்பு செய்தும் இவர்களுடைய பண்பாட்டைத் தமதாக்கியும் எழுதி வந்திருப்பது நேரடியாகச் சென்று கள பணி செய்ததன் மூலம் அறிய முடிகிறது. இந்நாள் வரையிலும் இரட்டடிப்பு வேலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அந்த வகையில் கடந்த 10.12.04 அன்று சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டைக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்ததின் மூலம் நாட்டரசன் கோட்டையை முதலில் உருவாக்கியர்கள் குடும்பர்கள் தான் என்றும் பின்னாளில் சிவகங்கை பாளையக்காரர்களுக்கும், குடும்பர்களுக்கும் ஏற்பட்ட நிலமீட்புப் போரினால் குடும்பர்கள் ஊரைவிட்டே பல இராமங்களுக்குச் சென்று குடிபுகுந்தனர். அந்நாளில் இவ்வூரில் தேவேந்திர குடும்பர்களே மிகுதியாக இருந்தனர். இவ்வூரிலுள்ள சக்திவாய்ந்த பெண் தெய்வமாகிய கண்ணுடைய நாயகி அம்மன் கோயிலை கட்டியதும் இவர்களே. இக்கோயிலிலுள்ள இறைவியின் பெயரால் எழுந்த கண்ணுடைய நாயகி அம்மன்பள்ளு பள்ளு இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்நாளில் இங்கு தேவேந்திரர்கள் வெறும் 5 குடும்பங்களே வசித்து வருகின்றனர். இவர்களிடம் நிலங்கள் இல்லை. படித்தவர் இல்லை, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ஊர்களிலும் ஏரி, குளங்களை நிர்வகிக்கும் பொறுப்பு காலங்காலமாக குடும்பமார்களிடையே இருந்து வந்திருக்கும் போது நாட்டரசன் கோட்டையில் மட்டும் வழக்கத்திற்கு மாறாக இங்குள்ள குளங்களை பறையர்கள் நிர்வகித்து வருவதும், நெல் அளப்பவராகவும் உள்ளனர், ஏன்? இம்மாற்றம் எதனால் எப்போது ஏற்பட்டது? என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**ஊரின் அமைவிடமும், தோற்றமும்**

மதுரை - தொண்டி நெடுஞ்சாலையில் சிவகங்கையில் இருந்து 10 - வது கிலோ மீட்டரில் நாட்டரசன் கோட்டை அமைந்துள்ளது. தமிழகத்தில் கண்மாய் பாசனம் மூலம் விவசாயம் அதிகம் நடைபெறும் மாவட்டங்களில் இரண்டாவது இடம் சிவகங்கை மாவட்டமாகத்தான் இருக்கும். ஏனென்றால் எங்கு பார்த்தாலும் அன்றைய மன்னர்கள் (சோழ, பாண்டியர்கள்) குளங்களை வெட்டி வைத்து நீரைத் தேக்கி, வயலைச் செழிப்பாக்கி இருப்பது இப்பகுதியை பார்த்தாலே தெரியும். சிவகங்கையில் இருந்து நாட்டரசன் கோட்டை செல்லும் வழியெங்கும், கண்மாய்களும், குளங்களும் தான் அதிகம். நிலம் செந்நிறமாக (சிவப்பு நிறம்) காட்சியளிக்கிறது.

பலநூறு வருடங்களுக்கு முன்பு இவ்விடம் பால்மரம் (ஒரு வித பால் வடிகின்ற மரம்) அதிகம் சூழ்ந்த நிலப்பகுதியாக இருந்தது. கிழக்கே இராமநாதபுரம் பகுதியில் இருந்து இப்பகுதியில் முதலில் குடியேறியவர்கள் குடும்பர்கள். இப் பகுதியில் அதிகம் முளைத்திருந்த பாலமரத்தை வெட்டி, தூற்றி விட்டு, விவசாயம் செய்வதற்காக ஒரு குளத்தையும் வெட்டி வைத்தனர். இக்குளத்திற்கு ஞாயமா குளம் என்று பெயர் வைத்தனர். இங்கு குடியேறிய முதல் குடும்பர் பெயர் திரு மாயாண்டி குடும்பர் எனத் தெரிகிறது. இன்றும் இவர்களின் வாரிசுகள் வாழ்ந்து வருகிறார்கள்.

இங்கே அதிகமாக கடம்ப மரங்களும் நிறைந்திருந்தது. காட்டைத் திருத்தி, நிலத்தை சமன் செய்து உழுது நீரை தேக்கிவைத்து தம் முன்னோர்கள் செய்த அதே நெல் விவசாயத்தை செய்து சீரோடும், சிறப்போடும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இந்த மாயாண்டி குடும்பத்தை ஒட்டியே பல நூறு குடும்பமார்கள் கூட்டமாக வந்து இவ்வூரில் குடியேறியிருக்கிறார்கள். நிலங்கள் அனைத்தும் தேவேந்திர குடும்பர்களிடமே இருந்து வந்திருக்கிறது. மாதம் 3 முறை மழை பெய்து ஆண்டுக்கு 3 மகசூல் நெல் எடுத்து வந்திருக்கின்றனர். இவர்களின் நிலங்களை பாதுகாக்க ஒரு கள்ளர் (இன்று நாட்டார்) என்று அழைக்கப்படுபவர் ஒருவர் காவலுக்காக கொண்டு வரப்பட்டிருக்கிறார். நிலமும், வீடும் கொடுக்கப்பட்டு தங்களின் குடும்ப விழாக்கள் அனைத்திலும் கலந்து கொள்ளும் அளவிற்கு பழகி வந்திருக்கிறார்கள்.

(இன்றும் இக்கள்ளர் குடும்பம் இருக்கிறது. இக்குடும்பத்தின் வாரிசான மணிமுரசு இன்றைய நாட்டரசன் கோட்டை சேர்மனாகவும், அனுபவ டாக்டராகவும் இருந்து மக்களுக்கு சேவை செய்து வருகிறார். மணிமுரசின் மகன் பேரரசு என்பவர் சினிமாத்துறையில் பணி புரிந்து டைரக்டராகி தற்போது



நடிகர் விஜய் நடித்து வெளிவந்த திருப்பாச்சி என்ற படத்தை இயக்கி வெளியிட்டுள்ளார்)

ஒரு காலத்தில் நாட்டரசன் கோட்டை அருகிலுள்ள கண்டனிபட்டி வாழ் கோனார் ஒருவர் பிரண்டைகுளம் வந்து நாட்டரசன் கோட்டை வழியாக சிவகங்கை அரண்மனைக்குப் பால் கொண்டு செல்வது வழக்கம். ஒரு நாள் பால் கொண்டு போகின்ற போது நாட்டரசன் கோட்டையில் ஒரு கல் இடரி பால் கொட்டியிருக்கிறது. அன்று அரண்மனைக்கு பால் கொண்டு செல்லாமல் மறுநாள் காலையில் பால் கொண்டு சென்றிருக்கிறார். மறுபடியும் அக்கல்லினால் தட்டி பால் கீழே கொட்டியது. இப்படி தினமும் கல் தட்டி பால் கொட்டுவது வழக்கமாக நடைபெற்று வந்திருக்கிறது.

இந்நிகழ்வை இக்கோனார் நாட்டரசன் கோட்டை வாழ் குடும்பர்களிடம் சொல்ல குடுமிச்சிகளும் குடும்பர்களும் விசயத்தை கேட்டு ஒரு மண்வெட்டியுடன் அந்தக் கல் இருந்த இடத்திற்கு வந்து அக்கல்லை தான் கொண்டுவந்த மண்வெட்டியால் தோண்டிய போது அக்கல்லிலிருந்து இரத்தம் பீறிட்டு வெளியேறியதாகவும் உடனே அங்கிருந்த தேவேந்திர குடுமிச்சிப் பெண்ணுக்கு சாமி வந்து, 'நான் கண்ணுடைய நாயகி அம்மன், எனக்கு இவ்விடத்திலேயே கோவில் கட்டுமாறு சொல்லியதாகவும், ஞானக் கண்ணுடையோருக்கு கண்ணுடையாளாக காட்சியளிப்பேன்' என்று கூறியது. அக்கல்லைத் தோண்டிய போது பீறிட்ட இரத்தம் சிவன் கோவிலில் வந்து விழுந்தது. சிவன் கோவிலாகையால் பெண்வாடை ஆகாது என்று இரத்தமானது கோவில் குளத்தின் தென்கரையில் இருந்த பாலமரம் அருகே விழுந்தது. இதுதான் எனக்கு பிடித்த இடம். இவ்விடத்திலேயே எனக்குக் கோவில் கட்டுங்கள் என்று சொன்னதின் பெயரில் கோவில் எழுப்பப்பட்டிருக்கிறது.

கண்ணுடைய நாயகி அம்மனுக்கு அர்ச்சகராக அன்று கம்பர் வம்சத்தில் புரோகிதர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றுவரை கம்பர் இனத்து அர்ச்சகர்களே கோவிலைப் பராமரித்து வருகிறார்கள்.

**குடும்பர்களின் சொத்துக்களும், நிலங்களும் பாளையபட்டுக்களில் சேர்க்கப்படல்**

கோவில் உருவாகிய நாள் முதல் கோவில் விழாக்கள் அனைத்திலும் தேவேந்திரர்களே முழுமையாகவும், முதன்மையாகவும் முன்னின்று நடத்தி வந்திருக்கின்றனர். தென் தமிழகம் முழுவதும் பாண்டியர் ஆட்சி முடிவுற்று பாண்டிய வம்ச மள்ளர்களின் சொத்துக்கள் பாளையப்பட்டுக்களில் சேர்க்கப்பட்டு கொண்டிருந்த நேரம் ஏராளமான நிலங்கள் கள்ளர்களிடமும், சேர்வைகளிடமும், மறவர்களிடமும், இடையர்களிடமும் போய் சேர்ந்தன. மீதமுள்ள வயல்கள் கோவில் பணிக்காக தேவதானமாக கோவில் நிலங்களாயின. சிவகங்கை பாளையக்காரர்களின் பார்வையானது செழிப்புற்றதும் புராதனமுடையதுமான நாட்டரசன் கோட்டையின் மீது பட்டது.

சிவகங்கை தனி சமஸ்தானமாகிய பின்பு நாட்டரசன் கோட்டையில் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு தொழில் மக்கள் குடி புகுந்தனர்.

தேவேந்திர குடும்பர்கள் பெருவாரியான நஞ்சை நிலத்தைப் பறிகொடுத்தனர். பின்னாளில் பண்ணை யாட்களாக மாறுமளவிற்கு வீழ்ச்சி யடைந்தனர். நாட்டரசன் கோட்டை அருகிலுள்ள சென்னல்குடியில் (சென்னல்குடி என்பது நெல் நாகரிக மருதநிலத் தலைமக்களான மள்ளர் குடியைக் குறிக்கும் சொல்லாகும்) கள்ளர்களுக்கு நிலம் அதிகமாகியது. இவர்கள் அனைவரும் சிவகங்கை, சமஸ்தான நிர்வாகத்திலுள்ள நிலங்களுக்கு காவல்காரர்களாகவும், தேவேந்திரர்களை ஒடுக்குவதற்கு படைபலம் தந்தும் வந்ததால் சிவகங்கைப் பாளையக்காரியான வேலுநாச்சியார் நிலங்கள் தானமாக அளித்துள்ளார். சென்னல்குடி கள்ளர்களின் நிலங்களை விவசாயம் செய்வது நாட்டரசன் கோட்டை தேவேந்திரர்கள்.

சிவகங்கை அரண்மனை மற்றும் பாளையக்காரர்களின் ஆட்சிப் பொறுப்புக்களிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பால், தயிர், மோர், வெண்ணை முதலிய பொருட்கள் கொடுத்து வந்ததால் இடையர்களுக்கு விளை நிலங்கள் பரிசாக கொடுக்கப்பட்டிருந்தது. கடையர்களின் வயல்களை நாட்டரசன் கோட்டையிலுள்ள சம்பாக்கமார்கள் வெள்ளாமை பார்த்து வந்தனர். பறையர்களை சேரி ஆட்கள் என்று அழைக்கும் பழக்கம் பல வருடங்களாகவே வழக்கிலிருக்கிறது. இன்றும் கூட பறையர்களை அனைத்து ஜாதியினரும் சேரிகாரர்கள், சேரி ஆட்கள் என்றே அழைத்து வருகின்றனர்.

**பறையனின் துரோகமும் குடும்பர்களின் பகையும்**

சென்னல்குடி வயல்களுக்கு கருங்காலக்குடி கண்மாயிலிருந்து தண்ணீர் திறந்து விட்டு தேவேந்திரர்கள் அத்தண்ணீரை நாட்டரசன் கோட்டையிலுள்ள குளத்தில் தேக்கி வைத்து மடை திறந்து நாள் வாரியாக தண்ணீரை வயல்களுக்கு பாய்ச்சி விவசாயம் செய்து வரும் வேலையில் கருங்காலக்குடி கண்மாயிலிருந்து தண்ணீர் வராத காரணத்தினால் கள்ளவீட்டு வெள்ளாமை சாவியாகிவிட்டது. கருங்காலக்குடி வாழ் கள்ள வீட்டுப் பெண்ணொருத்தி நாட்டரசன் கோட்டைக்கு வாக்கப்பட்டு வந்தது. இப்பெண்ணின் வீட்டு நிலங்களில் விளைந்த நெல் அனைத்தும் தண்ணீர் பாயாமல் சாவியாகிவிடுகிறது. இப்பெண்ணின் மாமியார் வயல்களை பார்த்து விட்டு வீடுவரும் போது இவரின் மருமகள் காலை நீட்டி உட்கார்ந்து வேடிக்கை பார்த்து கொண்டிருந்ததைப் பார்த்த பெண்ணின் மாமியார் பாட்டுப்பாடித் திட்டியது

காக்கொண்டை செய்க்கு நீர்கொண்டு
கருது விளையிற செய்க்கு தண்ணி
கொண்டாற மக கணக்கா கால்

நீட்டிகிட்டு இருக்கியே! - என்று மாமியார் கேட்டது. உடனே மருமகள் கோபித்துக் கொண்டு தனது தந்தை ஊராகிய கருங்காலக்குடிக்குச் சென்று தனது தந்தையிடம் விசயத்தை சொல்லி கண்மாய் தண்ணீரை

திறந்து விடச் சொல்லியது. உடனே அப்பெண்ணின் தந்தை நீரை திறந்து விட்டார். தண்ணீர் நாட்டரசன் கோட்டை குளத்துக்கு வந்து. நிரம்பியது. கருங்காலக்குடியிலிருந்து வரும் தண்ணியை மே பார்க்குறது குடும்பர் - ஒடையில் வரும் தண்ணீர் கள்ளரின் வயல்களுக்கு பாய்ந்து கொண்டிருக்கும் போது கோனார் நிலத்தை பண்ணை விவசாயம் செய்து கொண்டிருந்த பறையர் கள்ளர் வயலுக்கு செல்லும் நீரின் தடத்தை மறித்து குளத்தில் மொட்டபொத்து (துளையிட்டு) விட்டு இடையர் செய்க்கு (நிலத்துக்கு) பாய்ச்சியிருக்கிறார். கள்ளர் வயலில் இறங்கி தண்ணீரை பாய்ச்சி கொண்டிருந்த குடும்பர் திடீரென்று தண்ணீர் வருவுது தடைபடவே அக்குளத்துக்கு வந்து தண்ணீர் வருகிறதா என்று பார்த்த பொழுது தான் கள்ளர் வயலுக்கு வரும் வழி அடைக்கப்பட்டு குளத்தில் வேறொரு இடத்தில் மொட்ட பொத்து நீர் இடையர் வயலுக்கு செல்வதைக் கண்டார். உடனே கோனார் வயல்களை மே பார்த்துக் கொண்டிருந்த பறையனிடம் யார் இந்தக் குளத்தை மொட்ட பொத்தது என கேட்க எனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டார். உடனே குளத்து மடையை சரிசெய்து நீர்பாய்ச்சி கொண்டிருந்த குடும்பர் மறுபடியும் தனது வயலுக்கு நீர் வருவது நிற்கவே மீண்டும் குளத்துக்கு வந்து பார்க்கும் போது மறுபடியும் குளம் மொட்ட பொத்திருப்பதை பார்த்தார். அங்குள்ள பறையரிடம் விபரத்தை கேட்கவே எனக்கு தெரியாது, நான் பார்க்கவே இல்லை என்று பொய் கூறினார். மீண்டும், மீண்டும் இப்படி தண்ணீர் வருவது நின்று போகவே, குடும்பனார்க்கு கடுங்கோபம் வந்தது. இதை செய்தது அந்த பறையன்தான் என்று கண்டு பிடித்தார். உடனே கோபத்தில் அப்பறையனின் தலையை வெட்டி, குளக்கரையில் உள்ள பனைமரத்தடியில் நிற்க வத்துவிட்டு ஊருக்குள் வந்து நடந்ததை சொல்லி தனது குடும்பத்தையும், மற்றுமுள்ள குடும்பர்களையும் கூட்டிக் கொண்டு தங்களது உறவினர்கள் அதிகமாக இருக்கிற நத்தம் கடுங்கால்க்குடிக்கு சென்று விட்டார்கள். போகும் போது இவர்கள் தங்களுடைய நிலங்களையும் இழுத்து சென்று விடவேண்டும் என்று நினைத்து நிலத்தின் மேலுள்ள பற்றால் நிலத்தை சங்கிலியால் கட்டி இழுத்து பார்த்ததாகவும் ஆனாலும் நிலம் நகரவே இல்லை எனவும், தங்களது நிலத்தையெல்லாம் விட்டு விட்டு சென்றுவிட்டார்கள். பறையன் இறந்ததால் அன்றிலிருந்து அக்குளம் பறையன் குள்ம் என்றாகிற்று.

**கோவிலில் தங்களுக்குரிய உரிமையையும், குடும்பு முறையையும் பறையர்களுக்கு அளித்தல்**

கண்ணுடை நாயகியம்மன் கோவில் உருவான காலத்தில் இருந்தே நாட்டரசன் கோட்டையிலுள்ள குடும்பமார்களுக்கு காரணம் காய்ச்சி இருந்து வந்திருக்கிறது. (காரணம் காய்ச்சி என்றால் கோவில் உரிமைகள்) இக்கோவிலில் நடைபெறும் அனைத்து விழாக்களிலும், வருடந்தோறும் நடைபெற்று வரும் திருவிழாவான வைகாசி பிரமோற்ஸவம், ஆடி முளைப்பாரித் திருவிழா 10 நாட்களும், ஐப்பசி கோலாட்ட திருவிழா 10 நாட்களும், தை மாத தைலக்காப்பு உற்சவம் 10 நாட்களும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை விசேஷமாக முழு களியாட்ட திருவிழா 48 நாட்களும் களியாட்ட நாளில் கண்ணுடைய நாயகியம்மன் 8 கரத்துடன் அமர்ந்த கோலத்தில் வெள்ளிரதத்தில் வைகாசி மாதம் சுவாதியில் வலம் வருகின்ற திருவிழாக்களிலும் தேவேந்திரர்களின் பங்கு மிக முக்கியமாக இருந்து வந்திருக்கின்றது.

நாட்டரசன் கோட்டையை சுற்றியுள்ள அனைத்து குளங்களை பாதுகாத்தும் பராமரித்தும் மடை குடும்பர்களாகவும், களத்து மேட்டுக்குச் சென்று நெல் அளந்து கொடுக்கும் அளவையர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர்.

இப்பறையனின் கொலைக்குப் பின்பு ஏற்பட்ட பகையால், இங்குள்ள பல நூறு பறையர்கள் குடும்பர்களிடம் சண்டையிட விரைந்து வந்த போது இவ்வூரிலுள்ள குடும்பர்கள் முழுவதும் பாதுகாப்பு கருதி தங்கள் உறவினர்கள் அதிகமுள்ள நத்தம் கருங்காலக்குடிக்குச் சென்று அடைக்கலம் புகுந்து விட்டார்கள் என்று பறையர்களுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் முதலில் இவ்வூரில் குடியேறி, ஊரையும், கோவிலையும் உண்டுபண்ணிய அந்த குடும்பர் குடும்பம் மட்டும் இவ்வூரிலேயே இருந்தார்கள். அந்த வயதான குடும்பர்க்கு காது கேட்காமலும், பார்வை சரிவர தெரியாமலும் தன் இரண்டு பெண் குழந்தைகளுடனும் ஒரு ஆணும் இருந்ததை இப்பறையர்கள் பார்த்தார்கள். இக்குடும்பத்தை மிரட்டிய பறையர்கள் தப்பி ஓடிய குடும்பர்களின் வீடுகளைக் கொள்ளையடித்து, நிலங்களையும் தன் வசப்படுத்தி கொண்டனர். உடனே இந்த வயதான குடும்பர் எங்களை விட்டு விடுங்கள், எங்கள் உறவினர்கள் செய்த கொலைக்கு நாங்கள் என்ன செய்ய முடியும். வேண்டுமானால் கண்ணுடைய நாயகியம்மன் கோவிலுள்ள காரணம் காய்ச்சியையும், குளத்து வேலையையும், நெல் அளக்கிற உரிமையையும் நீங்களே வைத்து கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார். கோவிலில் ஆடி மாதம் நடைபெறும் முளைப்பாரித் திருவிழாவில் தேவேந்திரர்களே அதிக முளைப்பாரி எடுத்து முன்னே சென்று இங்குள்ள கண்ணுடைய நாயகி அம்மன் கோவில் எதிரே உள்ள குடி தண்ணீர் குளத்தில் வருடத்திற்கு ஒரு முறை ஒரே ஒரு தேவேந்திரர் மட்டும் இறங்கி ஒரு குடம் தண்ணீர் எடுத்து ஒருகை மண் அள்ளிக் கொண்டு வருவார். மண்ணினை கரையில் உள்ள நகரத்தார் சமூக பெண்கள் தங்கள் பட்டு சேலையில் வாங்கி கொண்டு செல்வார்களாம்.

அந்தக் குறிப்பிட்ட நாளில் குளத்தில் வேறெந்த சமூகமும் உள்ளே இறங்குவது கிடையாது. இன்று இந்தக் குளத்துத் தண்ணீரை அனைத்து வீடுகளிலும் குடிதண்ணீராக பயன்படுத்துகின்றனர். இன்றும் இந்த குளத்திற்குள் யாரும் செருப்பு அணிந்தோ அல்லது குளிக்கவோ, வேறு எந்த ஒரு விதமான அசுத்தம் செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரியான பழக்கவழக்கங்கள் கோவிலிலிருந்தும், ஊரிலும் காலங்காலமாக வழங்கி வந்த அத்தனை உரிமைகளையும் தேவேந்திரர்கள் பறையர்களுக்கு அளித்த குடும்பனார் ஒரு கோரிக்கையையும் பறையர்களுக்கு முன் வைத்தார். அதாவது தேவேந்திரர்கள் யாராவது இறந்தால் பறையர்கள் ஒரு வீட்டுக்கு அரைக்கா ரூபாவும் 1/2 படி அரிசியும், ஒரு வீட்டுக்கு வரிவச்சு எங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

அதை கேட்ட சாம்பவர்கள் இறப்புக் கூலிக்கு நாங்கள் தான் செலவழிப்போம் நீங்கள் (குடும்பர்கள்) செய்யக்கூடாது என்றும் கூறினார்கள். அன்றிலிருந்து இன்றுவரை தேவேந்திரர்கள் இறந்தால் செம்முரசு கொட்டி அடக்கம் பண்ணுவது பறையர்களே. அன்று முதலாவதாக இறந்த குடும்பர் கருப்பனை பறையர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் 1/2 க்கா ரூபா, 1/2 படி அரிசியும் வரிவசூல் செய்து செம்முரசு அடித்து நல்லடக்கம் செய்தனர். இரண்டாவதாக காலாடி - என்பவரை அடக்கம் பண்ணியிருக்கின்றனர்.

பறையர்கள் தேவேந்திரர்களின் கோயில் உரிமையை பெற்றும், குளத்தை நிர்வகித்தும், நெல் அளக்கும் பறையர்களாகவும் இவ்வூரில் உள்ளனர். இந்த உரிமைகளுக்காக இவர்களுக்கு முறையாக பட்டயம் எழுதப்படவில்லை. வாய்மொழியாகவே அனைத்து சமூகப் பெரியவர்கள் முன்பும் பேசிய திர்ப்பின் படி நடந்து வருகின்றனர். மூலப் பட்டயத்தில் இன்றும் அனைத்து உரிமைகளும் குடும்பர்களுக்குத் தான் எழுதியிருக்கிறது. கோயில் மூலச் செப்புபட்டயம் கருமந்தக்குடி கோனார் (அம்பலம்) வெள்ளிரதம் ஓட்டுபவரிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**வரிகொடுக்க வேண்டாமென தேவேந்திரர்கள் பறையர்களிடம் கூறுதல்**

இப்படியாக பறையர்கள் தேவேந்திரர்கள் யாராவது இறக்கும் போது வரிகொடுத்தும், நல்லடக்கமும் செய்து வந்தனர். இந்தப் பழக்கத்தை திரு காலாடி மகனுடைய மகன் திரு ராக்கன் குடும்பன் என்பவருடைய மகளாகிய திருமதி கண்ணாத்தாள் வரியை வாங்காமல் நான் கிழக்கு சீமையில் பொன்னு எடுத்துவிட்டோம். இனிமேல் எங்களுக்கு நீங்கள் வரிகொடுக்கவும், அடக்கம் செய்யவும் வேண்டாம் என்று கூறிவிட்டார். ஏன்? என்று கேட்டதற்கு, பறையன் வீட்டில் பூரி வாங்குவது (பூரி வாங்குவது என்றால் பிச்சை வாங்குவது போலாகும்) கூடாது. அதனால் இனிமேல் நீங்கள் வரி செலுத்த வேண்டாம். அப்படிச் செலுத்தினால் கிழக்குச் சீமையில் உள்ள எங்கள் உறவினர்கள் எங்களை இழிவாகப் பேசுவார்கள் என்று கூறியதால் அப்பழக்கம் கைவிடப்பட்டது.

தேவேந்திரர்கள் தங்களுக்குரிய பூர்வீகமான உரிமைகளை பறையர்களுக்கு தாரைவார்த்து கொடுத்ததால் பறையர்கள் தாங்கள் நீண்ட நாட்களாக செய்துவந்த வேலைகளை, கோவிலில் பறையடிப்பது, சங்கு ஊதுவது, ஊரில் யாராவது இறந்தால் மேளம் அடிப்பது, தண்டோரா போடுவது, கோவிலை சுத்தம் செய்வது போன்ற வேலைகளை சரிவர செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு எழவே ஏன்? இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று கோவில் நிர்வாகிகள் கேட்டால் எங்களுக்குத்தானே கோவிலில் காரணம் காய்ச்சி கொடுக்கப்படுகிறது. அதனால் நாங்கள் பழைய வேலைகளை எல்லாம் செய்ய மாட்டோம் என்று கூறி வந்திருக்கின்றனர். இது அவ்வூரிலுள்ள பலருக்கு பிடிக்காமல் போகவே கோவில் முக்கியஸ்தர்கள் அனைவரும் ஒன்றுகூடி தேவேந்திரர்களிடம் வந்து கோவிலில் உங்களுக்கு உரிய காரணம் காய்ச்சியை பெற்று கொள்ளுங்கள், நீங்களே நடத்துங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதற்குத் தேவேந்திரர்கள் நாங்கள் குடும்ப தலைக்கட்டு குறைவாக இருக்கிறோம். எங்களால் முந்திய முறைப்படி கோயிலில் விழா நடத்துவது முடியாத காரியம் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். பறையர்களுடன் ஏற்பட்ட மோதலுக்குப்பின் தேவேந்திரர்கள் ஒரே ஒரு குடும்பம் தான் இருந்தது. இவர்களுக்குத் துணையாக கண்டுபட்டியில் வசித்த குடும்பர்கள் சிலரை தங்களுக்குத் துணையாக நாட்டரசன் கோட்டையில் வந்து குடி இருக்கும்படி கூறியதின் விளைவாக கண்டுபட்டி குடும்பர்கள் சிலர் வந்து இவர்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இன்றும் கூட இவ்வூரிலுள்ள பூர்வீகக்குடியான தேவேந்திரர்களும் இடையில் துணைக்காக அழைத்து வரப்பட்ட கண்டுபட்டி குடும்பர்களுக்கும் சிறு சிறு பிரச்சனைகள் வருவதுண்டு. நீங்கள் வந்தேறியவர்கள் என்று கண்டுபட்டி மள்ளர்களை திரு ராக்கன் குடும்பன் வகையறாக்கள் சொல்லி சண்டையிட்டு கொள்வது இன்றும் உள்ளது. தற்போது தேவேந்திரர்கள் மிகக் குறைவாகவும் சாதி எண்ணிக்கையில் பல்வேறு குடிகள் பல்வேறு காலகட்டங்களில் பாளையக்காரர்களுக்கு ஊழியம் பார்ப்பதற்காகவே இவ்வூரில் குடியேற்றப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

**நாட்டரசன் கோட்டையில் வாழும் பல்வேறு குடிகள்**

பறையர்கள் 50 வீடுகளும், நாட்டுக் கோட்டை செட்டியார்கள் 500 வீடுகளும், கள்ளர், சேர்வை, மறவர், பிள்ளை (சைவம்), கவுண்டர் வீடு நான்கு, நத்தமுடி உடையார் வீடு ஒன்றும், சக்கிலியர் வீடு 5 - ம், அய்யர் 40 வீடுகளும், 2 அக்ரகாரமும், துலுக்கர் 30 வீடும் இருந்து வருகிறார்கள். தற்போது காலாடி குடும்பன் மற்றும் திரு ராக்கன் குடும்பன் வகையறாக்கள் தேரடி ரோட்டின் கடைசியிலும், ஊரின் கிழக்கே இருக்கிற கோபால கிருஷ்ணன் தெருவில் வசித்து வருகின்றனர்.

**நாட்டரசன் கோட்டையில் உள்ள வேறு கோவில்களும், குடும்பர்**

அருள்மிகு கரிகால சோழீஸ்வரர் திருக்கோவில். இக்கோயிலின் மூலவர் கரிகால சோழீஸ்வரர், இறைவி சிவகாமி அம்பாள். கிழக்கு நோக்கிய திருக்கோவில்.

இக்கோவில் சோழிய மன்னன் கரிகால் சோழனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவாலயம். புராதன காலத் தமிழ்க் கல்வெட்டுக்கள் கோவில் கோபுர முன்பகுதியிலும், வெளி மற்றும் உள் பகுதியிலும் காணப்படுகிறது. கோபுரத்தின் இடது பக்க வெளிப்பக்கத்தில் கோ மல்ல

கூத்தாடு என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் கல்வெட்டுக்களைப் படிக்க முடியாத அளவிற்கு சுண்ணாம்பினால் வெள்ளை அடிக்கப்பட்டுள்ளது. கோ மல்ல கூத்தாடு என்பதின் விளக்கம் கோ - என்றால் அரசன், அரசி. மல்ல - என்றால் தேவேந்திரக் குடும்பர்கள் கூத்தாடு என்றால் (கூத்து என்றால் நடனம்) ஒரு வகையான நடனம். அரசர்களாகிய மல்லர்கள் நடனமாடிக் களித்து நெல் நடுகையின் போது ஆடிய கூத்திற்கு கடையக் கூத்து (கடையர் கூத்து) என்று பெயர். இக்கோவிலுள்ள கல்வெட்டிற்கும் இங்குள்ள குடும்பர்களுக்கும் மிகப் பெரிய தொடர்பு இருப்பது தெரிகிறது. நாட்டரசன் கோட்டையில் உள்ள குடும்பர்களின் பிரிவு கடையமள்ளர். தேவேந்திரர்கள் பன்னீராயிரம் கிளைகளைக் கொண்டவர்கள் என்கிறது பழனிச் செப்பு பட்டயம் (கி.பி.1528). அது போல் இங்குள்ள தேவேந்திரர்கள் தங்களை கடையமள்ளர் என்றே கூறுகின்றனர். தேவேந்திரனின் மனைவியாகிய இந்திராணி ஆடிய நடனத்துக்கு (கூத்திற்கு) கடையக் கூத்து என்று பெயர். அதை ஆடியவர்கள் கடையப் மள்ளர்கள் என்றே இலக்கியங்களும், கல்வெட்டுக்களும், நாட்டரசன் கோட்டை கண்ணுடைய நாயகியம்மன் மீது பாடப்பட்ட கண்ணுடைய நாயகியம்மன் பள்ளும், மற்ற பள்ளு இலக்கியங்களும் தெரிவிக்கின்றன. இங்குள்ள கடையமள்ளர்களுக்கு கிளை உண்டு. கிளையைப் பார்த்த பின்புதான் சம்பந்தம் பேசுவார்கள். ஒரே கிளையாக இருந்தால் அண்ணன், தங்கை உறவு வரும் என்பதால் வெவ்வேறு கிளைகளில் தான் பெண் கொடுத்து, பெண் எடுப்பர். நாட்டரசன் கோட்டையிலுள்ள தேவேந்திரர்களின் கிளை கடைய மள்ளரில் கருத்தான்கிளை - திருமதி கண்ணாத்தாள் கூறிய வேறு சில கடையர்களின் கிளைகள் மலை இடிச்சான் கிளை, செட்டான்கிளை, சுருச்சான் கிளை. சுருச்சான் கிளையில் மட்டும் மொத்தம் 7 கிளைகள் இருப்பதாக கூறப்படுகிறது.

1. வரிச்சான் 2. வாச்சான்கிளை 3. சுருச்சான் கிளை

4. வழியில் காளை நீட்டினான் கிளை

5. இடையர் கிளை 6. ஏப்பான் கிளை 7. குப்பான் கிளை

கடையமள்ளரின் பல நூறு கிளைகள் இருந்து வந்ததாகவும், காலப்போக்கில் ஒரு சில கிளைகள் தான் வழக்கில் இருப்பதாகவும் கூறுகிறார்கள். கடையமள்ளர்கள் ஒரு சகோதரன் தன்னுடைய உடன் பிறந்த அக்காள் மகளை திருமணம் முடிப்பதில்லை. இவர்கள் தங்களுடைய தாய்மாமனுக்கு வாக்கப்பட மாட்டார்களாம். தற்போதும் இவர்கள் பெண்பார்க்கச் சென்றால் முதலில் அவர்கள் என்ன கிளை என்று கேட்டுவிட்டுத்தான் மற்றதை பேசுவார்களாம். ஒரே கிளையாக இருந்தால் அண்ணன், தங்கச்சி என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டு, பெண் வீட்டாரிடம் நாங்கள் மாடு கேட்க வந்தோம் என்று சொல்லி விட்டு வந்து விடுவது இவர்களது வழக்கமாக இருந்து வருகிறது. கிழக்கே இராமநாதபுரம் முழுவதும் இவர்களுக்கு உறவினர்கள் தானாம். கடையமள்ளர்கள் பெரும்பான்மையாக இராமநாதபுரம் கடலோரப் பகுதிகளிலும் சிவகங்கை மாவட்டத்தில் அதிகமாக இருப்பதாகவும் கூறுகின்றனர். இவர்கள் தங்களை தேவேந்திர குடும்பரில் நாங்களே உயர் குடியினர், பெரிய கிளை கொண்டவர்கள், மற்ற சமூக வீடுகளிலும், வேறு வகை குடும்பமார் வீடுகளிலும் உணவருந்துவதில்லை என்றும் கூறி வருகின்றனர். எங்களுக்கு குல தெய்வம் மதுரை அழகர் மலையிலுள்ள கள்ளழகர் தான். கள்ளழகர் கோவிலின் கருவறையில் படுத்திருப்பது தேவேந்திரக் குடும்பன் என்றும் தலைக்கு தங்கமரக்கால் வைத்து கால் நீட்டி உறங்குகிறார் தேவேந்திரக் குடும்பன் என்றும் திருமதி கண்ணாத்தாள் வயது 85 கூறினார். மேலும் மள்ளரின் கடையர் வம்ச வழி வந்த திருமதி கண்ணாத்தாள் கூறும் போது எங்களது உறவினர்கள் வாழ்ந்து வருகின்ற மற்ற ஊர்களில் ஒன்றிரெண்டு குடும்பர்கள் இருந்தாலும், மரக்கால் அளப்பது, மண்டி போட்டு அளப்பது (மொழுங்கால் வைத்து அளப்பது) இவர்கள் தானாம். சாக்கு மாதிரி கோரையில் வைத்து தூற்றி அளப்பதற்கு குடும்பு அளப்பது என்று பெயர். இந்த மாதிரி பழக்கவழக்கங்கள் இன்னும் அனேக இராமங்களில் நடைமுறையில் இருக்கிறது.

ஆனால் இந்த ஊரில் மட்டும் பறையர் அளக்கிறார்கள். முன்பு தேவேந்திரர்கள் நெல் அளக்கும் போது பறையர்கள் வந்து பிச்சை கேட்பார்களாம். (நெல் கூலி கேட்பார்கள்). முன்பு தேவேந்திரர்களுக்கு கோவிலில் காரணம் காச்சி இருந்தது. அது இன்று பறையர்கள் அனுபவிக்கிறார்கள் என்று தன்னுடைய உள்ளக் குமுறலை கூறினார். கண்ணாத்தாளுடைய மகன் திருராக்கன் குடும்பன் கூறும் போது 5 வருடங்களுக்கு முன்னால் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட சாதிச் சண்டையினால் தேவேந்திரர்களும் முக்குலத்தோரும் மோதிக் கொண்டனர். அப்போது இவ்வூரிலுள்ள முக்குலத்தோர்கள் எல்லா மள்ளர்களின் வீடுகளுக்கும் தீ வைக்க வேண்டும். அவர்களை வெட்ட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அப்போது எங்களுக்கு பாதுகாப்பு கொடுத்தவர்கள் கோனார்கள் தான். முக்குலத்தோர்கள் கோனார்களிடம் மள்ளர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்டபோது இவ்வூரில் குடும்பமார்கள் இல்லை. ஊரைவிட்டு போய் விட்டதாக கூறிவிட்டார்கள். வந்தவர்களும் திரும்பிச் சென்று விட்டார்கள். நாட்டரசன் கோட்டையிலுள்ள கடையமள்ளர்களுக்கு குலதெய்வம் நெறிஞ்சிக்குடி - கருப்பு, அவரங்குடி - திருவழுங்கி, கப்படை - கருப்பையா, செல்லடையாள், ஆதியில் மதுரை அழகர் கோவில் தான் குல தெய்வம். பிற்பாடு பிடிமண் எடுத்து வந்து சில தலைமுறைக்கு முன்னால் மாற்றிக் கொண்டனர். இப்போதும் குடும்பத்தில் பிறந்த முதல் குழந்தைக்கு அழகர் கோயிலில் தான் கிடா வெட்டி முதல் முடி எடுக்கப்பட்டு வருகிறது. சமூக வாரியாக மதுரை கள்ளழகர் கோவிலில் வந்து வழிபடுவது எண்ணிக்கையில் அதிகம் தேவேந்திரக் குடும்பர்களே.





தேவேந்திரர்களிடம் இருந்து வந்த உரிமைகள் பறையர்களிடம் சென்ற பின்பு பறையர்கள் முன்பு செய்து வந்த ஒரு சில பழக்கவழக்கங்களை செய்ய முன்வராததால் ஊர் முக்கியஸ்தர்கள் குடும்பமார்களிடம் வந்து கோவில் உரிமையை மறுபடியும் நீங்களே எடுத்து நடத்துங்கள் என்று கூறிவருவதாகவும் மற்ற உங்கள் உறவினர்கள் வாழும் ஊரிலிருந்து ஆட்களை உங்களுக்கு துணையாக வைத்துக் கொண்டு கோவில் நிகழ்ச்சிகளை நடத்துங்கள் என்று வற்புறுத்தி வருவதாகவும் திருராக்கன் அவர்கள் கூறினார்கள். சென்ற வருடம் சேங்க வெட்டு நாங்கள் தான் செய்தோம் என்று கூறினார். சேங்க வெட்டு என்றால் பங்குனிமாதம் செவ்வாய் கிழமையில் சேங்க வைப்பது, மொளைப் போட்டு மறு செவ்வாய் கிழமை கோவிலுக்கு கொண்டு வந்து தெப்பத்தில் போடுவது.

இப்பகுதியில் பறையர்கள் தேவேந்திரர்களைப் பல வகையில் ஏமாற்றி வந்திருப்பதைக் கதைகளின் வாயிலாக சொல்கின்றனர். தேவேந்திரர்களின் அறியாமையும் இரக்க குணத்தையும், கொடுத்து உதவும் தன்மையும் தன்னை யார்? என்று அறியாதது, இவற்றையெல்லாம் பயன்படுத்தி மற்ற சமூகத்தார்கள் இவர்களைக் கோழை என்று எண்ணி வேலை வாங்கி வருகின்றனர். இங்குள்ள தேவேந்திரர்கள் இவ்வாறான தங்களுடைய வரலாறுகளைப் படித்து தாங்கள் யாரென்று அறிய வேண்டும். சொந்த வீடு, மாடு இவற்றை தவிர இவர்களுக்கு என்று எதுவுமே இல்லை. திருமதி கண்ணாத்தாள் அவர்கள் பல புராணக் கதைகளும், நாட்டுப்புற பாடல்களும், தேவேந்திரர்களை பற்றிய வரலாற்றுப் பாடல்களும் நாற்று நடவு பாடல்களும் பாடி வருகிறார். தேவேந்திரர்களின் வரலாற்றை பதிவு செய்வோர் நாட்டரசன் கோட்டை செல்வீர்களா?

நாட்டரசன் கோட்டையை பற்றிய வரலாற்றை எனக்குச் சொல்லி உதவியர்கள்

திரு. இரா.ஆறுமுகம் குடும்பனார் - வயது - 60
கோபால கிருஷ்ணன் தெரு, நாட்டரசன் கோட்டை (அஞ்சல்), சிவகங்கை - 630 556.
திருமதி. இராக்கம்மாள் குடும்பிச்சி - வயது 82
திரு. டாக்டர் மணிமுரசு - வயது 62 (கள்ளர்)
ஊராட்சி மன்ற தலைவர், திருப்பார்சி இயக்குனர் திருபேரரசு அவர்களின் தந்தை.
திருமதி. கண்ணாத்தாள் குடும்பிச்சி

21.12.04 களஆய்வு - தே. இராஜசேகரன் பி.இ,

* * *

## நற்றமிழ் தொண்டு நனி வாழியவே!

பெரம்பலூர் மாவட்டம் - செயங்கொண்டம் நகரையடுத்துள்ள 11 சிற்றூர்களில் குறள் பயிற்சி வகுப்பையும் - வள்ளுவர் வழிபாட்டையும் சிறப்பாக நடத்தி வருகிறார் புலவர். திரு. பொன்செல்வன். 17.1.2005 ல் முதலாண்டு நிறைவு விழாவையும் சிறப்பாக நடத்தினார். திருவள்ளுவர் ஞானமன்ற நிறுவரான இவரின் தமிழ்ப்பணி சிறப்பதாக! ...



பெரும்புலவர் ப. அரங்கசாமி
தலைவர் : தமிழகப் புலவர் குழு
21/12, புதுத் தெரு,
லால்குடி - 621 601, திருச்சி மாவட்டம்.

15.3.2005

"மள்ளர் மலரே" மக்கள் உணர்வைத்
தெள்ளத் தெளியத் தேர்ந்து சொல்கிறாய்
மள்ளர் என்போர் மாபோர் செய்யும்
உள்ளத் துணிவின் ஒப்பில் வீரரே
என்பதைச் சங்க இலக்கியங் கூறும்
தொன்மை வாய்ந்த தொல்தமிழ்க் குடியினர்
வீர மள்ளர் போர்பல வென்று
சீருடன் நாட்டுத் தலைமை கொண்டனர்

இவர்தாம்

கல்வியிற் சிறந்து கலைபல பயின்று
செல்வம் செழித்துச் செயல்திறம் ஓங்கி
வாகை சூடி வள்ளலாய் வாழ்ந்தனர்
தென்னக வரலா றதனில் இவர்தாம்
பன்முகச் சிறப்பின் வாழ்ந்த பழங்குடி
பலகல் வெட்டும் பலசெப் பேடும்
சொல்லுமிச் செய்தியை மலர்நீ சொல்வாய்

மள்ளர் மலரே

பேராசான்குரு சாமி சித்தரை
சீரா சானாய்க் கொண்டுநீ சிறந்தனை
சிந்தனைச் செம்மல் இவர்சொல் செய்திகள்
வந்தனைக் குரிய வரலா றாகும்
மக்கள் மலர்நீ நாளும் மலர்ந்து
மிக்க சீர்த்தி மேவுக இனிதே.

ப. அரங்கசாமி

## தொன்மம் என்பதால் . . .

தொன்மம் தொன்மம் எனத்தள்ளி விட்டால்
உண்மை வரலா றெங்கே கிடைக்கும்?
அண்மை வரலாற்றில் ஆயிரம் பொய்கள்
அத்தனையும் எண்ணின் தொன்மம் உண்மையாம்!
எழுத்தறியாக் காலத் திருந்த கற்பனை
கோட்டோ வியமெனில் இன்றுள கற்பனை
அடங்காக் கற்பனை அத்தனையும் போலிமை!
தொடங்கி வரலா றெழுதிடின் பொய்களே
அணிபெற நின்று ஆர்ப்பரிப்புச் செய்திடும்;
மூன்றடிக் குள்ளனும் வானுயர் என்றிடும்;
வாய்ப்பந்தல் கேட்கவே அறிவுளார் கூசுவர்!
நாய்கள் இங்கே நாடாளக் காணலாம்.
தன்னின மக்களைக் குதறியே குலைக்கும்
வேற்றார்க் கடிமை செய்துமனம் களிபெறும்!
உய்தி அறியார் தொன்மை வரலாறு
முருகனாய் சிவனாய் முனிவராய்ப் பற்பல
முடிச்சுகள் கொண்டவை, அந்நிலை ஓர்ந்து
நடிப்பின்றி ஆயின் வரலாற்றின் வண்ணம்
படிப்படி யாகப் பளிச்செனக் காணும்!
பண்ணே வரலாறு பலகோலம் பூண்டு
கண்டறிய மாட்டா திருப்பினும் மெய்யுணர்
குமுகாய நோக்கில் தெளிந்திடு வாரெனில்
கொள்கை வரலாறு வளர்ந்தது தெரியும்!

வந்தவாசி
12.3.05

பறம்பை அறிவன்

குடும்பன், மன்னர், பன்னாடி, பலகான், மூப்பன், தேவேந்திர குலத்தான் எனும் தேவேந்திர குல வேளாளர்களைக் குறிக்கின்றன. இச்சொற்களை மன்னர் என்ற குல அடையாளச் சொல்லுடனும் சேர்த்து வரலாறு காண வேண்டும்.

'தமிழ்நாட்டில் ஒரு நிகரில்லாக் கல்வெட்டு' என டாக்டர் இரா. நாகசாமியால் போற்றப்பட்ட பூலாங்குறிச்சி குடும்பியர் கல்வெட்டு வாசகம் : (வலப்புறம் உள்ள கல்வெட்டு)

"கோச் சேந்தங் கூற்றற்கு யாண்டு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு நாண் முப்பத்தாறு பக்கந் தைப்பிறை நாள் பன்னிரண்டு வேள் மருகண் மகன் கடலகப் பெரும்படைத் தலைவன் எங்குமான் னொல்லையூருக் கூற்றத்து வேள்கூருப் பச்செறிச்சின் மலை மேற் செய்வித்த தேவகுலமும் முத்தூற்றுக் கூற்றத்து விளமரு(ச்) செய்வித்த தேவகுலமும் மதிரை உலவியத்தான் குளத்தின் வடபக்கத்துச் செய்வித்த தாபதப்பள்ளியுள் வாசிதேவனாரு கோட்டமும் மவை அத்திகோயத்தாரு முள்மனையாருந் நாற்பாற்றிணைகளுள் தமக்கு காவலாக அவற்றுக்குற்றது செயக் கொண்டமையால் லவற்றை வழிபடுவதும் மவற்றுக்குப் பெயப்பட்ட அறப்புறந் நடையாட்டுவதுஞ் செயும் பாண்டங்கருஞ் சேவுகரும் விருமச்சாரிள்ளுந் தருமிகளு மூர் காவல் கொண்டாரு ஆராய்ந்து வைபிக்கப் பட்டாரு அல்லது வழிபடப் பெறாமையும் மவற்றுட் பச்செறிச்சில் மலைமேற் செய்வித்த தேவகுலத்துக்குக் குடும்பியராவாரு குழலூருத் துஞ்சிய உடையாரால் வேள்கூருப் பெயப்பட்ட குடும்பியர் வழியல்லது வேறொரு குடும்பாடப் பெறாமைமையும் மத் தேவகுலத்துக் குற்றது செய்து வல்லக்குற்றந் தொழில் செயகளுடஞ் செயவும் மெழுதி வைக்கென் றருளித்தாரு கேட்டாருலவியப் பெருந்திணை நல்லங்கிழானேஇ ணங்குமானும் முலவியப் பெருந்திணை பட ஆறுகிழான் கீரங்காரியு முலவியப் பெருந்திணை அம்பருகிழான் குமாரம் போந்தையுங் கேட்டு வந்து கூறின னோலை எழுதுவான் றமன்காரி கன்னான் இது கடைப்பி ஓலை காற் கண்டெழுதிக் கொடுத்தேன் வேள்ளாட்டான் நரி நாரியங்காரி".

தமிழ்நாட்டின் வரலாற்று ஆய்வாளர்கள் இனிமேலாவது தமிழ்நாட்டின் வரலாறுகளையும், பண்பாடுகளையும், ஆட்சியர்களையும், ஆட்சி முறைகளையும் குடும்பர்களுடன் தொடர்புபடுத்திச் சரியாக எழுத வேண்டும்.

❖ ❖ ❖

## கல்வெட்டாய்வாளர் முனைவர் இரா.ப. கருணானந்தன் மறைவு

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையில் கோயம்புத்தூரில் காப்பாட்சியராகப் பணிபுரிந்த கல்வெட்டாய்வாளர் முனைவர் இரா.ப. கருணானந்தன் 20.2.2005 அன்று இயற்கை எய்தினார்.



முனைவர் இரா.ப. கருணானந்தன்

கல்வெட்டாய்வில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தை ஏற்படுத்திக் கொண்ட அறிஞர். தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றத்தில் திருநெல்வேலி வடக்கு அழகுநாச்சியாபுரம் சின்னக் கருப்பையா தேவேந்திரர் நினைவு அறக்கட்டளையில் கல்வெட்டுக்களில் தேவேந்திரர் வரலாறு என்னும் தலைப்பில் நல்ல சொற்பொழிவாற்றிய மன்னரிய அறிஞர் ஆவார். மன்னர் தாம் பன்னர் என்றும் அவர்கள் தாம் தமிழ் மூவேந்தர் மரபினர் என்றும் தமது கல்வெட்டு ஆதாரங்களுடன் உரத்துக் கூறிய இளைஞர். பல மேடைகளில் தமிழரின் வரலாறு மன்னர் எனும் தேவேந்திரர் வரலாறாக இருப்பதை சான்றுகளுடன் எடுத்துக்காட்டிய ஆய்வாளர்.

இவர் திருமதி மல்லம்மா என்னும் துணைவியாரையும் மங்கையர்கரசி, பெருஞ்சித்திரன் என்னும் மக்களையும் விட்டுச் சென்றிருக்கிறார். அன்னாரின் குடும்பத்தினருக்கு மன்னர் மலர், தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம் அமைப்பினர் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### திருமண வாழ்த்துக்கள்

ஆகு. ஆறுமுகச்செவ்வேள், - பா. சிவகாமி

கோயம்புத்தூர் புலியகுளம் ஆறுமுகப் பண்ணாடி - இலட்சுமி மன்னத்தியார் பெயரனும் புலவர் கிஆ குப்புராசு - சரோசினி மன்னத்தியார் குமாரனுமான திருவளர் மன்னர் சிஆ ஆறுமுகச் செவ்வேளுக்கும் நாமக்கல் மாவட்டம் தூசூர் சங்க மூப்பனார் - செம்பாயி மன்னத்தியார் பெயர்த்தியும் தூ.ச. பாலசுந்தரம் தேவேந்திரர் - பாப்பாத்தி மன்னத்தியார் குமாரத்தியுமான திருநிறைமன்னி பா. சிவகாமிக்கும் 23.3.2005 அன்று நாமக்கல்லில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. முன்னவர் குருசாமி சித்தர், டி.ஏ.டி. ஆறுமுகம், வேலுச்சாமி மேனாள் சட்டப்பேரவை உறுப்பினர் மற்றும் தலைவர்களும் உறவினர்களும் நண்பர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருளினர்.

இந்தத் திருமண விழாவிலும் 25.3.2005 அன்று கோவையில் நடைபெற்ற திருமண வரவேற்பு விழாவிலும் குடுமி, குடுமிச்சி, குடும்பர், மன்னர் எனும் தேவேந்திர குல வேளாளர்களின் பெருமைகளைக் காட்டும் சேர சோழ பாண்டிய மூவேந்தர் மரபினரின் அடையாளங்கள் என்னும் நூல் மணமக்களின் குடும்பத்தாரால் 500 விருந்தினர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மணமக்களுக்கு மன்னர் மலரின் வாழ்த்துக்கள்.

### காரைக்குடி தேவேந்திர குல மன்னர் உறவின்முறை சார்பாக இலவசத் திருமணத் தகவல் தொடர்பு மையம்

காரைக்குடி தேவேந்திர குல மன்னர் உறவின் முறை சார்பாக இலவசத் திருமணத் தகவல் தொடர்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் தங்களின் குறிப்புகளை அனுப்பி வைக்கவும். பதிவுக் கட்டணம், மற்றும் தபால் செலவு இலவசம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

டாக்டர் V. சேது M.B.B.S., நெ.4 மன்னர் தெரு,
முத்துப்பட்டிணம், காரைக்குடி - 630 001.
தொலைபேசி : 04565 - 237997, 281399
செல்பேசி : 98429 - 54154



## அன்புள்ள ஆசிரியருக்கு

15.3.2005

அன்புள்ள அய்யா குருசாமி சித்தர் அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் அனுப்பிவைத்த புத்தகங்கள் மற்றும் மன்னர் மலர் மார்ச் 2005 இதழும் கிடைத்தது. மகிழ்ச்சி.

விரிவாக ஓர் மாபெரும் சமூக ஆய்வினை தொடர்ந்து தங்களின் தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம் மூலம் செய்து வருவதைப் பார்க்கின்றேன். தேவேந்திர குலத்தார், பள்ளர், மல்லர் எல்லாம் ஆண்ட பரம்பரையின் வம்சமாகக் கல்வெட்டுக்கள் உள்ளிட்ட இதர சான்றாதாரங்கள் மூலமாக சித்தரிக்கின்றீர்கள் - நிரூபிக்கின்றீர்கள். நெல் நாகரீகத்தை உருவாக்கியவர்கள் எனும் போது நமது பண்டைய சிறப்பிற்கு காரணமாக மன்னர்கள் இருந்துள்ளதைக் குறிப்பிடுகிறீர்கள்.

பல்வேறு சமூக மக்கள் வாழ்ந்த காலக் கட்டத்தில் ஒரு சில குறிப்பிட்ட சாதிமக்கள் சாதி இழிவுகளாலும் அடிமை முறையினாலும் பண்ணை ஆதிக்கச் சுரண்டலின் கீழும், நிலப்புரத்துவ ஆதிக்கத்தின் கீழும் வாழ்ந்த முறையையும் நாம் பண்பாட்டு ஆய்வோடு இணைத்துப் பார்க்க வேண்டும். அவரவர்க்கு (சாதிக்கு) ஒதுக்கீடு என்பது அவசியமே. அதற்கு முன்னர் நாம் செய்ய வேண்டியவற்றை ஒருங்கிணைத்துக் கொள்வது மிகப்பெரும் செயல்பாட்டிற்கு வழிகாட்டியாக இருக்கும். மன்னர்களின் வாழ்வியல் பொருளாதார நிலைபாட்டை வைத்து, "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்பதாக வாதங்கள் தொடர்கிறது. இதைத்தான் மார்ச் மன்னர் மலர் தலையங்கம் இறுதியில் முன்மொழிகிறது.

தனது வரலாறுகளையும் பண்பாடுகளையும் வளமையையும் வலிமையையும் அறிந்து விழிப்புப் பெறாதவரை விடுதலை பெற இயலாது என்பது மன்னர்களுக்கு மட்டுமில்லை; பிற சாதியினரால் ஒடுக்கப்படுகிற தலித்துக்களின் எல்லா சாதியினர்க்கும் பொருந்தும். உழைக்கும் மக்களாய் இருந்த மக்கள் ஆளும் வர்க்கமாய் மாற தங்களுக்குள்ளன அரசியல் ரீதியான ஒருங்கிணைப்பும் செயலாக்கமும் மிக மிக அவசியம்.

மீண்டும் எழுதுகிறேன்.

அன்புடன்
விழி.பா. இதயவேந்தன்
18, ஆபிதா தோட்டம், சாலாமேடு,
கண்டமானடி (அ), விழுப்புரம் - 605 401.

ஆசிரியர் குறிப்பு : கி.பி. 16 - ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட பரம்பரை தெலுங்கர்களிடம் ஆட்சியையும் நிலங்களையும் இழந்தது. இந்த தேவேந்திரர் சமூகத்தை செட்டியூல்டு சாதிகளில் சேர்த்து ஆயிரம் ஆண்டு கால அடிமை என்பது அர்த்தமற்றது. தெலுங்கர் ஆட்சியில் அவர்களாலும் அவர்களுக்குத் துணைபோன தமிழ்த் துரோக சாதிகளாலும் அடக்கி ஒடுக்கப்பட்டது வரலாறு.

தேவேந்திரர் அடுத்த பட்டியலுக்கு செல்வதற்கு விரும்புவதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பறையர் அருந்திதியருடன் சேர்த்து தேவேந்திரர் வரலாறு, பண்பாடு, கலை, வாழ்வியல் முறைகள் பேசுவது அபத்தம். அது தேவேந்திரர்களை முன்னேற்றுவதற்கு அல்ல, மாறாகப் பின்னுக்குத் தள்ளுவது ஆகும். தேவேந்திரர் தலித் அல்லர். செட்டியூல்டு சாதிகள் பட்டியல் வருவதற்கு முன் அனைத்துச் சமூகங்களும் தனித்தனியாகவே அடையாளப்படுத்தப்பட்டன. மற்றவர்களால் ஒடுக்கப்படுவதைத் தவிர வேறு ஒற்றுமைகள் இல்லை. தேவேந்திரர் என்ற பெயரையே தலித்வாதிகள் பயன்படுத்த வேண்டும். தேவேந்திரர் வேறு பட்டியலுக்குச் செல்ல உதவ வேண்டும்.

❖ ❖ ❖

பாவை. நடவரசன்,
8, மண்டபத் தெரு — 2036, மீனம், 3
ஈரோடு - 638 001

அன்புடையீர்,

வணக்கம். மன்னர் மலர் (மார்சு 2005) படித்தேன். பழந்தமிழர் தம் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் தளபதி வெண்ணிக் காலாடிக் குடும்பனாரின் பங்கு கட்டுரை அமைந்திருக்கிறது.

வெண்ணிக் காலாடிக் குடும்பனாரின் வீரமரணம், காவியமாய் நெஞ்சைக் கவர்கிறது. நாட்டைக் காத்த வீரனுக்கு நடுகல் நட்டு, வீரவணக்கம் செய்துவருவதைப் படித்ததும் மகிழ்ந்து போனேன். இன்றைக்கும் காலாடி கோயில் என்று அழைக்கப்படுவதையும் படித்து பெருமிதங் கொண்டேன்.

புறநானூற்றுப் புலவர் மாங்குடிகிழார்
"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே" - புறம் 335

எனப் பாடுகிறார், வீரரைத் தெய்வமாக வழிபடுவதே தெய்வ வழிபாடாகும். நெல்லைச் சொரிந்து வழிபடும் தெய்வம் வேறொன்றும் இல்லை என்கிறார். இது பழந்தமிழர் பண்பாடாகும். தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டுத் தொடர்ந்து வரும் பண்பாடாகும்.

மாவீரன் நெப்போலியனின் படைவீரன், போர்களத்தில் காலிழந்து மயங்கிக் கிடக்கிறான். அப்பொழுது வெற்றியின் அடையாளமாக, கோட்டையில் தன்னாட்டுக் கொடி பறப்பதைக் காண்கிறான். அடுத்த நொடி, பக்கத்தில் இருந்த குதிரை மீது ஏறி நெப்போலியன் இருக்குமிடவந்து செய்தி சொல்கிறான். என்ன கால் இல்லை, அரத்தம் கசிகிறது என்றான் நெப்போலியன். அதைப் பார்த்ததும் விழுந்து இறக்கிறான். காலாடிக் குடும்பனாரின் சிறப்பும் அதைப் போல் வரலாற்றுப் புகழ் படைத்தது.

❖ ❖ ❖

## புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம்

# கானாடு 108 ஊர்த் தேவேந்திரர் (குடும்பர்)

## (குடும்பு ஆட்சி முறை) இளஞ்சாவூர் முத்துமாரியம்மன் கோயில்த் திருவிழா

மதுரையிலிருந்து புதுக்கோட்டை செல்லும் வழியில் திருமயம் (திருமெய்யம்) வருகிறது. திருமயத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 108 ஊர்த் தேவேந்திரர்கள் ஒரு அமைப்பாக (குடும்பாக) இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். திருமயம் பேருந்து நிலையத்திற்கு அருகில் இந்த அமைப்பின் "108 ஊர்த் தேவேந்திரர் மாளிகை" என்கிற தலைமை அலுவலகம் பெயர் பலகையுடன் உள்ளது. முகப்பில் கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மாளிகையின் உள்ளே பெரிய அரங்கம் உள்ளது. உள்ளே தற்போது கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. 108 ஊர்த் தேவேந்திரர் குடும்பு அமைப்பின் தலைவர் திரு. கும. சுப்பையா பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். அவர் இந்தக் குடும்பர் மாளிகையில் நடந்து கொண்டிருக்கும் கட்டிடப் பணிகளையும் மேலும் பல திட்டங்களையும் விவரித்துக் கூறினார்.

திருமயத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேலூர் தான் கானாடு 108 ஊர்த் தேவேந்திரக் குடும்பர் தலைவர் கும. சுப்பையா அவர்களின் சொந்த ஊர். இந்த ஊரில் அரசின் உதவியுடன் கட்டப்படும் தொகுப்பு வீடுகளே கிடையாது. ஒவ்வொரு தேவேந்திரரும் நன்கு வடிவமைக்கப்பட்ட நகரம் போல் நன்றாக வடிமைக்கப்பட்ட வீடுகளைக் கட்டி வசிக்கின்றனர். ஊரின் அமைப்பே நகரம் போல் காட்சியளிக்கிறது. வெளியூரில் வேலை செய்கிற தேவேந்திரர்கள் கூட தங்கள் சொந்த ஊரில் நல்ல பெரிய வீடுகளைக் கட்டி வைத்துள்ளனர், தன் சொந்த ஊரை மறந்து வாழும் தேவேந்திரர்கள் பார்வையிட வேண்டிய சிறந்த ஊர் மேலூர் ஆகும்.

உத்திரமேரூர்க் கல்வெட்டுக்கள் (இந்தியத் தொல்லியல் துறை ஆண்டறிக்கை 1904-5 பக்கங்கள் 136 - 142), பூலாங்குறிச்சி கல்வெட்டுக்கள் (ஆவணம் இதழ் 1, அக்டோபர் 1991, டாக்டர் இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம்) ஆகியவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழர் ஆட்சிமுறையான குடும்பு ஆட்சிமுறை பற்றி ஆராயும் ஆய்வாளர்கள் ஆராய வேண்டிய இந்த கானாடு 108 ஊர் தேவேந்திரர் அமைப்பின் கட்டமைப்பு பற்றிப் பார்ப்போம். ஊர்ப் பஞ்சாயத்துகளையும், நீதி நிர்வாகத்தையும் நிலங்களையும், நீர்ப்பாசன நீர்நிலைகளையும் மற்றும் வாரியங்களையும் முன்பு, தமிழர் ஆட்சிகாலத்தில், நிர்வகித்து வந்த இந்த குடும்பு ஆட்சிமுறை. தற்போது சுருங்கி கோயில் திருவிழாக்கள், சமூகப் பிரச்சனைகளை கவனிக்கும் ஒரு அமைப்பாக உள்ளது.

### கானாடு 108 ஊர்த் தேவேந்திரர் குடும்பு ஆட்சிக்குக் கட்டுப்பட்ட ஊர்கள்

### கோட்டையூர் பகுதி (வட்டகை) (21)

1. வெ. கோட்டையூர்
2. கே. கோட்டையூர்
3. ராயவரம் (தெற்கு)
4. ராயவரம் (வடக்கு)
5. தச்சம்பட்டி
6. சொக்கநாதப்புரம்
7. பாலையூர்
8. மிரட்டுநிலை
9. ஆத்தங்கரைப்பட்டி
10. தேக்காட்டூர்
11. நெய்வாசல்பட்டி
12. ஆயிங்குடி
13. குருந்தல்குடி
14. முனசந்தை
15. பெ. பூவன்பட்டி
16. கொத்தவயல்
17. சே. புதுப்பட்டி
18. பெருங்குடி
19. அரிமனம்
20. பெ. பாப்பான்பட்டி
21. பொன்னம்பட்டி

### மருங்கூர் பகுதி (வட்டகை) (23)

22. மருங்கூர் (வேப்பம்பட்டி)
23. ஏனப்பட்டி
24. மெய்யபட்டி
25. பாப்பம்பட்டி
26. பொன்குடிப்பட்டி
27. அரங்கிணம்பட்டி
28. விராச்சிலை
29. மேலவயல்
30. புறாவயல்
31. புலிவலம்
32. நகரத்துப்பட்டி
33. செட்டிபிச்சன்பட்டி
34. நமுணசமுத்திரம்
35. மலுக்கன்பட்டி
36. நெய்கோணம்
37. தேமுத்துப்பட்டி
38. அரையந்தம்பட்டி
39. லெம்பலக்குடி
40. நல்லாம்பட்டி
41. கடம்பவயல்
42. கோட்டூர்
43. S.R. பட்டணம்
44. அம்மினிப்பட்டி

### இளஞ்சாவூர் பகுதி (வட்டகை) (20)

45. இளஞ்சாவூர்
46. காடத்தாம்பட்டி
47. சி. கடியாப்பட்டி
48. முடுக்குப்பட்டி
49. வலயன்வயல்
50. சாத்தாக்குடிப்பட்டி
51. தமுனாப்பட்டி
52. கானப்பூர்
53. ஊனையூர்
54. பன்னம்பட்டி
55. ஏனாதிப்பட்டி
56. வ்டகுடிப்புட்டி
57. சவேரியார்புரம்
58. நேமந்தான்பட்டி
59. க்ரணத்தாம்பட்டி
60. கானாடு காத்தான்
61. கைலாசபுரம்
62. நெடுங்குடி
63. செட்டிபட்டி
64. ஆனைவாரி

### மேலூரர் பகுதி (வட்டகை) (26)

65. மேலூர்
66. அண்டக்குடிப்பட்டி
67. வாரியப்பட்டி
68. மூங்கித்தாபட்டி
69. பட்டணம்
70. துல்லயானூர்
71. திருமா
72. சி. கல்லுவயல்
73. பனங்கொண்டான்பட்டி
74. ராங்கியம்
75. கன்னனூர்
76. ஓச்சம்பட்டி
77. சே. முள்ளிப்பட்டி
78. வெள்ளிப்பட்டி
79. பெருந்துறை
80. கரைமணப்பட்டி
81. வயல்மணப்பட்டி
82. வெள்ளுகுடிப்பட்டி
83. கரையாம்பட்டி
84. புது ஓசுவான்பட்டி
85. பழைய ஓசுவான்பட்டி
86. இளையத்தாக்குடி
87. பிராமணன்பட்டி
88. ஓடையப்பட்டி
89. சேதுராபட்டி.
90. திருமயம்

### மணவாளன்கரை பகுதி (வட்டகை) (18)

91. மணவாளன்கரை
92. ஆனைபட்டி
93. குளத்துப்பட்டி
94. சங்கரன்பட்டி
95. மாவூர்
96. வெங்களூர்
97. கோனாப்பட்டு (பெருமான்புரம்)
98. தாளப்பட்டி
99. எளனாப்பட்டி
100. சிரத்தக்குடி
101. நெய்வாசல்
102. நல்லூர்
103. பழைய ஆத்தங்குடி
104. புதிய ஆத்தங்குடி
105. பலவான்குடி
106. நேமம்
107. பழைய ஆனைபட்டி
108. கோனாப்பட்டு (வடக்கு)

இந்தக் கானாடு 108 ஊர்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்க்குடும்பர் மற்றும் வாரியர் உள்ளனர். ஐந்து வட்டகை அல்லது நாடுகளுக்கும் ஐந்து நாட்டுக் குடும்பர்கள் உள்ளனர்.

**நாட்டுக் குடும்பர்கள்**

| | |
|---|---|
| 1. மேலூர் வட்டகை | - திரு. கு.பி. ஆறுமுகம் தேவேந்திரர் |
| 2. இளஞ்சாவூர் வட்டகை | - திரு. அழ. முத்துக் கண்ணு தேவேந்திரர் |
| 3. மருங்கூர் வட்டகை | - திரு. ஆ. பழனி தேவேந்திரர் |
| 4. கோட்டையூர் வட்டகை | - திரு. சே. கைனன் தேவேந்திரர் |
| 5. மணவாளன்கரை வட்டகை | - திரு. ரெ. முத்து தேவேந்திரர் |

கானாடு 108 ஊர்த் தேவேந்திரர் அமைப்புக்கு 26 பேர்கள் நிர்வாகக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தற்போது நிர்வாகக் குழு உறுப்பினர்களாக உள்ளவர்கள் வருமாறு

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்**

1. திரு. பழ. கருப்பையா தேவேந்திரர், இளஞ்சாவூர்
2. திரு. வி.கே.ஆர். பெரிய கருப்பன் தேவேந்திரர், வாசுகிபுரம்
3. திரு. அழ. முத்தன் தேவேந்திரர், வாரியப்பட்டி
4. திரு. ப. சோலை தேவேந்திரர், மெய்யபட்டி
5. திரு. பா. அழகப்பன் தேவேந்திரர், மேலூர்
6. திரு. குருந்தன் தேவேந்திரர், விராச்சிலை
7. திரு. பி. பெரியையா தேவேந்திரர், மெய்யபட்டி
8. திரு. பி. சண்முகம் தேவேந்திரர், மெய்யபட்டி
9. திரு. கே. அழகேசன் தேவேந்திரர், ஓசுவான்பட்டி
10. திரு. கே. அழகப்பன் தேவேந்திரர், ஓசுவான்பட்டி
11. திரு. எஸ்.பி. சின்னையா தேவேந்திரர், மேலூர்
12. திரு. முனைவர் கே. புரவி தேவேந்திரர், மேலூர்
13. திரு. சி. அழகப்பன் தேவேந்திரர், கடியாபட்டி
14. திரு. சுப. விராச்சாமி தேவேந்திரர், கோனாபட்டு
15. திரு. காளிமுத்து தேவேந்திரர், அரங்கிராண்பட்டி
16. திரு. ஆறுமுகம் தேவேந்திர், கோட்டூர்
17. திரு. பி.சி. பெரியகருப்பன் தேவேந்திரர், வாசுகிபுரம்
18. திரு. பிச்சன் தேவேந்திரர், குறிச்சிப்பட்டி
19. திரு. சி. அழகப்பன் தேவேந்திரர் / வி. கோட்டையன் தேவேந்திரர் அற்புதபுரம்
20. திரு. முத்துராமன் தேவேந்திரர், காடத்தாம்பட்டி
21. திரு. கே. வைரவன் தேவேந்திரர், ஏனப்பட்டி
22. திரு. சிதம்பரம் தேவேந்திரர், குளத்துப்பட்டி
23. திரு. அழகன் தேவேந்திரர், முள்ளிப்பட்டி
24. திரு. சிதம்பரம் தேவேந்திரர் வெள்ளுகுடிப்பட்டி
25. திரு. சாமன் தேவேந்திரர், ஏனாதிபட்டி
26. திரு. வீரன் தேவேந்திரர், சேதுராபட்டி

**கானாடு 108 ஊர்த் தேவேந்திரர் குடும்புகள் அமைப்புப் பொறுப்பாளர்கள்**

1. நாட்டுத் தலைவர் : திரு. கும. சுப்பையா தேவேந்திரர், M.A., M.Ed., மேலூர்
2. நாட்டுத் துணைத் தலைவர் : திரு. பன்னீர்செல்வம் தேவேந்திரர், D.C.E., ஏனப்பட்டி
3. நாட்டுச் செயலாளர் : திரு. எம்.பி. முத்துசாமி தேவேந்திரர், மனப்பட்டி
4. நாட்டுத் துணைச் செயலாளர் : திரு. இ. சேகர் தேவேந்திரர், B.A., மணவாளன்கரை
5. நாட்டு இணைச் செயலாளர் : திரு. பி. அழகன் தேவேந்திரர், M.A., மேலூர்
6. நாட்டுக் கணக்கர் : திரு. எம். முத்துவீரன் தேவேந்திரர், B.Sc., சத்தியமூர்த்தி நகர், திருமயம்
7. நாட்டு பொருளாளர் : திரு. கே. சரவணன் தேவேந்திரர், M.A., இளஞ்சாவூர்

இந்த அமைப்பினர் இளஞ்சாவூர் அருள்மிகு முத்து மாரியம்மன் கோயில் 8 - ஆம் மண்டகப்படி திருவிழாவைக் கொண்டாடுவது பற்றித் தகவல் சேகரித்த மதுரை தேவேந்திரர் தன்னார்வ அறக்கட்டளைத் தலைவர் திரு தங்கராஜ் விவரிப்பதை அவருடைய எழுத்திலேயே காண்போம்.

கானாடு 108 கிராமத் தலைவர் திரு. கும. சுப்பையா அவர்களும நிர்வாகிகளும் சேர்ந்து இளஞ்சாவூர் அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில் திருவிழாவில், கானாடு 108 கிராமத் தேவேந்திரர்களுக்கு உரிய எட்டாம் மண்டகப்படி விழா அழைப்பிதழைத் தந்தார்கள். தாங்கள் அவசியம் வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

அழைப்பிதழைப் பிரித்துப் படித்த பொழுது ஒவ்வொரு கிராமத்தையும், 108 கிராமத் தேவேந்திரர்கள் அமைப்பு முறையாக செயல்பட்டு வருவதை அறியமுடிந்தது. கானாடு என்பது திருமயத்தை சுற்றி உள்ள கிராமங்கள். 108 கிராமத்திலும் குடும்பர்கள், வாரியர் முறையாக இன்றும் செயல்பட்டு வருகிறார்கள். இவர்கள் இளஞ்சாவூர் எட்டாம் மண்டகப்படி போழ்து ஒன்றாகச் சேர்ந்து தங்கள் கிராமத்தில் இருந்து கானாடு 108 கிராமத் தேவேந்திரர்கள் அமைப்பிற்கு முறையாக வரி கொடுக்கிறார்கள். ஒரு குடும்பம் என்பது ஒரு

புள்ளியாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் பழைய புள்ளிகள் உடன் ஊரில் புதிய புள்ளிகள் யார் யார் என்பதைக் கணக்கிட்டு அதைப் பட்டியலிட்டு ஒவ்வொரு ஊர் குடும்பரும் ஒரு பதிவு ஏட்டில் பதிவு செய்து வைத்து இருக்கிறார்கள். அப்படிக் கணக்கிட்டு வைத்து இருக்கும் நோட்டுடன் 13.3.2005 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு தேவேந்திரர் மாளிகை வரவேண்டும் என்று குறிப்பு இருந்தது.

இந்த 108 கிராமத்திற்கும் எப்படித்தகவல் சென்று, ஒவ்வொரு குடும்பத்திற்கும் எப்படி தகவல் சென்று அவர்கள் வரி செலுத்த என்ன ஏற்பாடு என்று தலைவரைக் கேட்ட பொழுது 108 (கிராமத்) நாட்டுத் தலைவர், 108 நாட்டுத் (கிராமத்) தேவேந்திரர்கள் அமைப்பு, பிரிக்கப்பட்டு உள்ளது. ஐந்து பகுதிகளுக்கும் ஐந்து குடும்பர்கள், தேர்வு செய்யப்பட்டவர்கள், இருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 18 முதல் 26 கிராமங்களின் பொறுப்பு இருக்கும். முதலில் இந்த ஐந்து குடும்பர்களுக்கும் தகவல் செல்லும். இந்த ஐந்து குடும்பர்கள், தங்களின் நிர்வாகத்தில் உள்ள கிராமங்களுக்கு அந்த அந்த ஊர் ஊர்க் குடும்பர்களுக்கு தகவல் தருவார்கள். அந்த ஊர்க் குடும்பர், வாரியர் மூலம் ஒவ்வொரு தேவேந்திரர் வீட்டிற்கும் தகவல் கொடுப்பார்கள் என்று கானாடு 108 நாட்டு (குடும்பர்கள்) தேவேந்திரர்களின் அமைப்பை விளக்கினார்கள். பல நூற்றாண்டுகளாகத் தேவேந்திரர்கள் மத்தியில் உள்ள குடும்பர், வாரியார் என்ற அமைப்பு கிராம அளவில் மட்டும் அள்ளாமல் கானாடு 108 கிராமக் குடும்பர்கள் அமைப்பாக இன்றும் செயல்பட்டு வருவதை பார்க்கும் பொழுது தேவேந்திரர்கள் வாழ்ந்த பெருமை, இவர்களுடைய சமூகக் கட்டமைப்பு நம்முன் இன்றும் பிரமிப்புடன் எழுச்சியுடன் நிற்கிறது.

இப்படி தலைவர் சொல்வது போல் 108 கிராமத் (தேவேந்திரர்) குடும்பர்கள் எல்லாம் இளஞ்சாவூர் அருள்மிகு மாரியம்மன் திருவிழாவிற்கு வருகை தருகிறார்களா என்று பார்க்க தலைவர் அழைப்பை ஏற்று 14.3.2005 அன்று பங்குனி மாதம் முதல்நாள் திங்கட்கிழமை சென்று இருந்தேன்.

இளஞ்சாவூர் கிராமத்தை நெருங்க நெருங்க ஒரே மக்கள் கூட்டம், திருவிழா கடைவீதிகள், உணவு விடுதிகள், இளநீர்க்கடை என்று 100க்கும் அதிகமான கடைகள் நம்மை வரவேற்கின்றன. இந்தக் கடைகளை எல்லாம் தாண்டி, மக்கள் கூட்டத்தில் உள்ளே சென்று அருள்மிகு முத்து மாரியம்மன் கோயில் அருகில் வலது பக்கத்தில் கானாடு 108 கிராம (தேவேந்திரர்கள்) குடும்பர்கள் 8ம் மண்டகபடி மண்டபம் நம்மை வரவேற்கிறது. உள்ளே சென்றவுடன் தலைவர்கள், நிர்வாகிகள் வரவேற்றனர். மண்டபத்தில் (மக்கள்) தேவேந்திரர் எழுச்சியுடன் அமர்ந்து இருந்தனர். இரவு 7.00 மணிபோல் 108 நாட்டுத் தலைவர் கும. சுப்பையா, ஐந்து நாட்டுக் குடும்பர்கள், 25 மெம்பர்கள், நிர்வாகிகள் எல்லாம் சேர்ந்து நம் மண்டபத்தில் இருந்து அருள்மிகு முத்து மாரியம்மனுக்கு 108 நாட்டுத் தேவேந்திரர்களால் நடத்தப்படும் அபிஷேகத்தில் கலந்து கொண்டு அம்மன் தரிசனத்தைப் பார்க்க கோயிலை வலம் வந்து 108 நாட்டு குடும்பர்கள் மாரியம்மன் முன் வந்து நிற்க அபிஷேகம் தொடங்கியது. பால், சந்தனம், பன்னீர், பஞ்சாமிர்தம், தயிர், மஞ்சள் என்று எல்லா அபிஷேகம், அம்மன் அலங்காரம் முடிந்து, தீபாராதனை நடைபெற்றது. கோயில் பண்டாரம் பூஜைகளை செய்து, பிரசாதத்தை தலைவரிடம் கொடுக்க தேவேந்திரர்கள் மறுபடியும் மண்டபத்திற்கு வந்தோம். மாரியம்மன் கோயிலில் இருந்து வெளியே வரும் பொழுது வலது



தேவேந்திரர்களின் 8 - ஆம் மண்டகப்படி முத்துமாரியம்மன் குதிரை வாகனத்தில் உலா வருதல்

பக்கத்தில் முத்து மாரியம்மன் உற்சவர் வாகனத்தில் வைத்து மூத்த பண்டாரம், மூலம் அலங்காரம் நடத்தும் காட்சியை காண்போம். தலைவர் அவர்கள் இது பற்றி விளக்குகையில், அருள்மிகு முத்து மாரியம்மன் உற்சவர் காட்சி அளிக்கும் குதிரை வாகனம் தேவேந்திரர் சமூகத்தினருக்குச் சொந்தமான வாகனம். கோயிலில் உள்ள வாகனம் இதர சமூகத்தினருக்குப் பொதுவான வாகனம் என்று குறிப்பிட்டார். தேவேந்திரர் சமூகத்திற்கு தனி வாகனம் ஏற்பாடு செய்து அதன்மீது அருள்மிகு முத்து மாரியம்மன் வீதிஉலா இன்னும் சிறிது நேரத்தில் புறப்படும் என்று சொல்லிக் கொண்டே நம் சமூக மண்டபத்தை சென்று அடைந்தோம். நம் மண்டபத்தில் கலசம் வைத்து பூஜை நடந்து கொண்டு இருந்தது. முத்து மாரியம்மன் அலங்காரம் முடிந்து குதிரை வாகனத்தில் எழுந்தருளி சன்னதி முன்பு காட்சி அளித்தார். அரசு அதிகாரிகள் அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் நிர்வாகிகள், பல்வேறு ஊரில் இருந்து திருவிழாவிற்கு வந்து இருந்த தேவேந்திரர்கள் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் தீபாரதனை காட்டப்பட்டு, அம்மனைக் கோயிலுக்கு வெளியே நின்ற சப்பரத்திற்குக் கொண்டு வந்து தேவேந்திரர்கள் அமர்த்தினார்கள். அருள்மிகு முத்து மாரியம்மன் கானாடு 108 கிராம தேவேந்திரர்கள் முன்னே ஊர்வலமாகச் செல்ல அம்மன் வீதிவலம் புறப்பட ஆயத்தமான பொழுது, அதிர்வேட்டுகள் முழங்கியது. வான வேடிக்கை துவங்கியது, கானாடு கிராமத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கோலாட்டம் ஆடி முன்னே வர மக்கள் அருள்மிகு முத்து மாரியம்மனைத் தரிசனம் செய்தனர். மக்களுக்கு காட்சி அளித்த உற்சவர் அருள்மிகு முத்து மாரியம்மன் கானாடு



108 குடும்பனார் மண்டபத்தில் வந்து தேவேந்திரர்களுக்குக் காட்சி அளிக்கவும் அன்று இரவு முழுவதும் தங்கி செல்கிறாள். ஒவ்வொரு கிராமத்தைச் சேர்ந்த தேவேந்திரர்கள் முத்து மாரியம்மனை நம் சமூக மண்டபத்தில் கும்பிடுவதும், தேங்காய் பழம் கற்பூரம் வைத்துப் படைத்து ஆரத்தி காட்டுவதும், பட்டு சாத்துவதும் இப்படி அன்று இரவு முழுவதும் தேவேந்திரர்கள் மண்டபத்திற்கு வந்து செல்வது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அன்று இரவு 108 நாட்டுத் தேவேந்திரர்கள் ஏற்பாட்டில் "வள்ளி திருமண நிகழ்ச்சி" நாடகம் நடைபெற்றது. இரவு முழுவதும் மக்கள் அமர்ந்து வள்ளி திருமண நாடகத்தைப் பார்த்து ரசித்தார்கள்.

இப்படித் தேவேந்திரர்கள் (மக்கள்) ஒரு பக்கம் ஆனந்தமாக இருக்க, மண்டபத்தில் ஒரு பக்கத்தில் 108 நாட்டு தேவேந்திரர் அமைப்பில் நிர்வாகிகள் வந்து அமர்ந்தனர். ஒவ்வொரு நாட்டு குடும்பரும் அங்கு தங்கள் நாட்டில் எவ்வளவு புள்ளிகள் என்பதை காண்பிக்க அதை 108 நாட்டு தேவேந்திரர் அமைப்பின் நிர்வாகிகள் சரிபார்க்கின்றனர். சரிபார்த்த புள்ளிக்கு 50 ரூபாய் என்ற தலைமை முடிவின்படி பணத்தைச் செலுத்தி ரசீது வாங்கிச் சென்றனர். ஒவ்வொரு நாடும் இப்படி இரவு முழுவதும் வருவது புள்ளிப் படி சரிபார்த்து பணம் செலுத்துவதுமாக நடந்த காட்சி நம்மை பிரமிக்க வைத்தது. எந்தவித சலசலப்போ சத்தமோ இல்லாமல் அமைதியாக நடந்த் காட்சி இன்றும் (தன் கிராம அமைப்பின்) குடும்பு அமைப்பை எப்படி சிறப்பாக நடத்தி வருகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும் என்றால் திருமயம் சென்று கானாடு 108 கிராம தேவேந்திரர் அமைப்பை பார்த்தால் தெரியும்.

இத்துடன் சில ஊரில் நாட்டுக் குடும்பர் வாரியர் பொருப்பில் இருந்து விலக நேரிட்டவர்கள் 108 நாட்டுத் தலைமைக் குடும்பரான திரு. கும. சுப்பையா அவர்களை வந்து மண்டபத்தில் சந்தித்தனர். அவரும் யார் யார் குடும்பராக வாரியராக இருக்க விரும்புநீர்கள் என்று கேட்டு அவர்கள் பெயரை சீட்டு எழுதி குலுக்கி அம்மன் முன் போட்டு முதல் சீட்டை எடுத்தார். அதில் வந்த பெயரை வாசித்தார். இன்று முதல் இந்த நாட்டுக்கு நீங்க்ள் குடும்பர் என்று அறிவித்தார். இரண்டாவது சீட்டை எடுத்தார். இன்று முதல் நீங்கள் வாரியார் என்று அறிவித்தார். எந்தவித பரபரப்போ நிகழாமல் அமைதியாக நடந்து முடிந்தது. குடும்பர் தேர்வு முடிந்தவுடன் முன்னால் குடும்பர் தன்னிடம் உள்ள வரவு செலவு சம்பந்தமானதையும் பணத்தையும் கானாடு 108 நாட்டு தேவேந்திரர் தலைவர் கும. சுப்பையாவிடம் ஒப்படைக்க அதை அவர் புதியதாக பொறுப்பு ஏற்றுக் கொண்ட குடும்பரிடம் ஒப்படைத்தார். இந்தக் காட்சியை பார்க்கும் பொழுது எனக்கு மெய் சிலிர்த்தது. இன்று அரசு தேர்தல் என்ற நடைமுறை கிராம பஞ்சாயத்தில் நடக்கிறது ஒரே அடிதடி ஊர் சிதறி கிடப்பதை நாம் பார்க்க முடிகிறது. தேவேந்திரர்கள் மட்டும் எப்படி தன் சமூக அமைப்பை முறையாக இன்று வரை நடத்தி வருகிறார்கள் என்பதை தேர்தல் நடத்தும் அதிகாரிகள் பார்வையிட வேண்டும். அப்பொழுது தான் இந்தச் சமூகம் எப்படி இன்றும் உயிரோட்டத்துடன் தன் சமூக அமைப்பை கட்டிக் காத்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது தெரியும்.

13.3.2005 அன்று இரவு முழுவதும் நம் மண்டபத்தில் தேவேந்திரர்களுக்கு காட்சி அளித்த முத்து மாரியம்மன் 14.3.2005 காலை நம் மண்டபத்தில் இருந்து புறப்பட்டு கோயிலுக்குள் சென்றார். கோயிலில் அம்மன் சன்னதி முன்பாக உற்சவருக்கு தீபாரதனை முடிந்து கானாடு 108 குடும்பர்கள் தலைவர் திரு. கும. சுப்பையா அவர்களுக்கு இளஞ்சாவூர் ஸ்ரீமுத்து மாரியம்மன் கோயில் தலைமைப் பண்டாரம் பரிவட்டம் கட்டி அம்மனுக்கு சாத்தப்பட்டு இருந்த பெரிய மாலையை சாத்தினார்கள். அந்த மாலையுடன் தேவேந்திரர்கள், புடைசூழ ஸ்ரீமுத்து மாரியம்மன் கோயிலை வலம் வந்தார்கள். அதன்பிறகு முத்து மாரியம்மன் சன்னதி முன்பாக வந்து நின்று வணங்கி இந்த ஆண்டு எந்தவித குறையும் இல்லாமல் சிறப்புற அம்மனுக்கு செய்ய வேண்டிய மண்டகபடியைச் செய்ததை நினைத்து அங்கு இருந்து விடைபெற்று 108 கிராமக் குடும்பர்கள் மண்டபத்திற்கு வந்தார்கள். அங்கு ஒவ்வொரு நாட்டுக் குடும்பருக்கும் பல்வேறு முக்கியஸ்தர்களுக்கும் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, பிரசாதம் என்று தனித்தனியாக அந்த அந்த நாட்டுக் குடும்பருக்கும் தலைவர் கும. சுப்பையா அவர்கள் பிரசாதமாகக் கொடுத்து, ஒவ்வொருவரிடமும் நன்றியை தெரிவித்து விடைபெற்று அவர் அவர்கள் தங்கள் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

**மேலும் சில சிறப்பு அம்சங்கள்**

தகவல் 1: கானாடு 108 கிராமத் தலைவர் கும. சுப்பையா மேலூர் கிராமத்தைச் சேர்ந்த குடும்பத்ினரே பரம்பரையாகத் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடத்தி வந்தனர். திரு. கும. சுப்பையா அவர்கள் தற்பொழுது அந்த நடைமுறையை மாற்றி உள்ளார். ஜனநாயகம் முறைபடி தேர்தல் முறையில் அனைத்து நடைமுறைகளும் வரக்கூடிய காலங்களில் நடைமுறை படுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தலைவரே முன் வைத்து உள்ளார்கள்.

தகவல் 2: இளஞ்சாவூர் மாரியம்மன் திருவிழாவின் பொழுது ஒரு குழு தலைபாகை அணிந்து (வல்யும்) சலங்கை வைத்துக் கொண்டு தலைமை தேவேந்திரர் எங்கு எல்லாம் சென்று மரியாதை பெரும் நிகழ்வு நடக்கும் இடங்களுக்கு எல்லாம் தொடர்ந்து வந்து சலங்கையை ஆட்டி சத்தம் செய்தார்கள். இவர் யார் என்று தலைவர் திரு. கும. சுப்பையா அவர்களிடம் கேட்டேன். அவரை நாங்கள் பிராம் பிரியர் என்று அழைப்போம். அவர்கள் எங்களைப் பேராண்டி என்று அழைப்பர். நாங்கள் அவரைப் பாட்டன் என்று அழைப்போம். அவர்களுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்த உறவுகளோ இல்லை. ஆனால் அவர்கள் தங்களைத் தேவேந்திரர்கள் என்றே அழைத்துக் கொள்கிறார்கள். அரசு சான்றிதழிலும் தேவேந்திரர்கள் என்றே வாங்குகிறார்கள். இது பற்றி மேலும் எதாவது தகவல் உண்டா என்று கேட்டேன். இதற்குத் தலைவர் சொன்ன தகவல்: ஒரு காலத்தில் காஞ்சிபுரத்தில் தேர் இழுக்க

முடியாமல் நின்றதாகவும் அதற்குப் பரிகாரமாக நிறை மாத கர்ப்பிணி தேர்சக்கரத்தில் படுத்து பலியானதாகவும் அதன்பிறகு தேவேந்திரர்கள் தேரை இழுத்தார்கள் என்று ஒரு வரலாறு உள்ளதாக அப்பா எனக்குச் சொன்னதாகச் சொல்லி முடித்தார். மேலும் பிரம்பரியர் குடும்பங்களுக்கு இன்றும் 108 நாட்டிலும் வரிகொடுத்து வருகிறோம் என்றார். காஞ்சிபுரத்திற்கும் கானாடு 108 நாட்டு கிராமத்திற்கும் ஏதோ உறவு உள்ளது. அது பற்றி முழுமையாகத் தெரியவில்லை. இது பற்றி மேலும் ஆய்வுகள் செய்ய வேண்டியுள்ளது.

காஞ்சிபுரம் செப்பேட்டில் உள்ள தேர் இழுத்ததற்கான செப்பு பட்டயத்திற்கும் இவர்களுக்கும் ஏதோ தொடர்பு உள்ளது என்பதை நாம் அறிய முடிகிறது.

கானாட்டுக் குடும்பர்களின் கி.பி. 15 - ஆம் நூற்றாண்டு மற்றும் கம்பண்ண உடையார் காலப் போர்படைகள் பற்றி அறிய கீழ்கண்ட கல்வெட்டுக்கள், பட்டயங்களைப் படிக்கவும்.

1. வாகை மங்கலம் ஓலைப்பட்டயம் : மள்ளர் மலர், ஜுன் 1998, பக்கம் 4 - 5

2. பொன்னமராவதி செப்பேடு : மள்ளர் மலர், அக்டோபர் 2004, பக்கம் 10 - 13

3. கோனாட்டில் பாண்டியர் - சோழர் - சண்டையினால் பள்ளர் படைகளுக்குள் ஏற்பட்ட பகை தீர்வு முறி, மள்ளர் மலர், டிசம்பர் 2004, பக்கம் 4 - 5. மேலும் படிக்க: இந்த அமைப்புத் தலைவர் கும. சுப்பையா பதவி ஏற்பு பற்றிய செய்தி: மள்ளர் மலர், மார்ச 1999, பக்கம் 19 - 20. ❋❋❋

## அன்புள்ள ஆசிரியருக்கு

தங்க. சங்கரபாண்டியன் 71/1 - அ11, மணலிப்புதுநகர்,
18.3.05 சென்னை - 600 103.

அன்புடையீர், வணக்கம்.

மள்ளர் மலர் மார்ச 2005 இதழ் கண்டேன். ஏடு அற்புதமாய் உள்ளது. நெல்லின் மக்களுக்காய் ஓர் ஏட்டினைத் தொடங்கி அதனை கடந்த 11 ஆண்டுகளாக விடாமல் தொடர்ந்து நடத்தி வருவது வியப்பிற்குரியது மட்டுமல்ல, பாராட்டிற்கும் உரியதாகும். இந்திய அரசியலும் சாதிகளின் விழிப்பும் தலையங்கம் மிகவும் அருமை. எழுத்துச் சித்தர் அ.சு. மணியன் அவர்களை அறிமுகப்படுத்தியது போற்றத்தக்கது. தொடர்ந்து இதுபோன்ற எழுத்தாளர்களை அறிமுகம் செய்திட வேண்டுகின்றேன். இந்திய சுதந்திர போராட்டத்தில் தளபதி வெண்ணிக் காலாடிக் குடும்பனாரின் பங்கு பற்றிய பொறியாளர் பா. பழனிக்குமார் கட்டுரை அற்புதம். அம்மன் குளம் செப்புப்பட்டயம் என்ற தங்கள் கட்டுரை மிகவும் சிறப்புடன் விளங்கியது.

தேவேந்திர குல வேளாளர் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வரும் தங்கள் செயற்பாடுகள் காலகாலங்களுக்கு வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பதில் அய்யமில்லை.

அன்புடன்
தங்க. சங்கரபாண்டியன்

## நாமக்கல் மாவட்டம் தூசூரில் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் சிலைக்கு மாலை அணிவித்து பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் மரியாதை செலுத்தினார்

நாமக்கல் மாவட்டம் தூசூர் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் பேரவையினர் 23.3.2005 அன்று ஆ.கு. ஆறுமுகச் செவ்வேள் - பா. சிவகாமி ஆகியோர் திருமணத்தையொட்டி தனியாக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து விழாவாக நடத்தினர். பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்புரையாற்றினார். கூட்டத்திற்கு கே. செல்லதுரை தலைமை வகித்தார். சதா. அருணகிரி, பழனி, முருகன் பாடி பில்டர்ஸ், கொசவம்பட்டி, எஸ். வீராசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். புலவர் கி.ஆ. குப்புராசு, வேணுகோபால் பண்ணாடி, ஒ. வெங்கிடாசலம், டி.எம். சுப்பிரமணி, கரியான் (எ) இரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தூசூர் விழாக் குழுவில் கீழ்கண்டோர் பங்கு வகித்து சிறப்பாக நடத்தினர். லோட்டஸ் கன்ஸ்ட்டிரக்சன் ஏ. அவினாசி, ஏ. பரணிராசன், பி. தண்டபாணி, கே. ராஜி, எஸ். செல்வநாயகம், எஸ். ராஜ்குமார், எஸ். ஆறுமுகம், சந்திரகுமார், சுப்பிரமணி B.Sc., B.Ed., சிவசங்கர் B.Sc., ஆர். கார்மேகம் B.A., PGDCA., எஸ். முருகய்யா, டி.பி. கருப்பையா, எம். தனராஜா, டி.பி.ஜி. மகாமுனி, தங்க. பழனிவேல், பி.ஏ. விஸ்வநாதன், ஜி. மோகன், பி. கருப்பண்ணன், எம். பெரியசாமி, பொன்னுசாமி, ஆர். கனகராஜ், எஸ். முருகன், சி. குமரவேல் மற்றும் தூசூர் மக்கள்.

### நன்னன் அண்ணல் நினைவுப் பரிசுப் போட்டி
### கி.பி.2036 - புதினம்.
### போட்டி முடிவுகள் : அறிவிப்பு.

1. கோவை திரு. சூசன் எழுதிய மீண்டும் வரும் பொற்காலம் என்னும் புதினம் முதல் பரிசாக முப்பதாயிரம் உருவா பெறும். 2. சோலையார் பேட்டை திரு. நாராயணி கண்ணகி எழுதிய கருந்தீ என்னும் புதினம் இரண்டாம் பரிசாகப் பதினைந்தாயிரம் உருவா பெறும். 3. கோம்பை திரு. மு. முத்துவேலன் எழுதிய சமத்துவபுரம் என்னும் புதினம் மூன்றாம் பரிசாக அய்ந்தாயிரம் உருவா பெறும். 30.7.2005 இல் சென்னையில் நடைபெறும் விழாவில் இப்பரிசுகள் வழங்கப்படும்.

26.3.2005 மா. நன்னன்
சென்னை - 600 015 நன்னன் குடி சார்பாக
22 அய், முதல்தெரு, அரங்கராசபுரம்,
சைதாப்பேட்டை,
பேசி : 044 - 22350193.



இலக்கியத் தொடர்

# செங்கோட்டுப் பள்ளு

சென்ற இதழ் தொடர்ச்சி:

சதாசிவக் குடும்பனாரும் இளையமள்ளி அபிராமியும் பண்ணை விசாரிப்பானுக்கு ஐந்து பொன், தேங்காய், இளநீர், பச்சரிசி முதலியன கொடுத்து கும்பிடுகின்றனர். தாய்வீடு சென்ற மூத்தமள்ளி சிவகாமியை சமாதானம் சொல்லி அழைத்து வருமாறு குடும்பனாரிடம் பண்ணைக்காரன் கூறுகிறான். குடும்பனார் தமது குறைகளை பொறுத்துக் கொண்டு வீட்டுக்கு வருமாறு அழைக்கிறார். சிவகாமி பிணக்கிக் கொண்டிருக்கிறார். பின்பு குடும்பனாரோடு வந்து இளைய மள்ளியையும் சேர்த்துக் கொண்டு பண்ணைக்காரனைப் பார்க்கின்றனர்.

கலிப்பா

நந்திதன்னில் ஏறுகின்ற நாகா சலப்பெருமான்
விந்தைசெறி பண்ணை விசாரிக்க வந்தவரைச்
சந்தித்துத் தான்வருவோம் தையலே என்று பள்ளன்
சிந்தைமகிழ்ந் தேஇளைய தேவியுடன் தோன்றினனே 156

பண்ணைக்காரனுக்குப் பொன், பழம் தேங்காய் முதலியன குடும்பனார் தம்பதியர் காணிக்கையாக வைத்து கும்பிடுதல்

சிந்து

இன்ப முடனே சதாசிவக் குடும்பனும் – நல்ல
இளையபள்ளி யும்கூடி ரதிமதன் போல்
பண்பொடு கூடையிலே தேங்காயும் இளநீர் – வெல்லம்
பச்சரிசியும் வாழைப் பழமும் அடுக்கி
அன்பொடும் இவள் தலையில் எடுத்து வைத்து – தட்டில்
அடைக்காய் வெள்ளிலை முடிப்பைந்து பொன்னதும்
நன் பெருமை யாகயிவன் தானும் எடுத்து – நல்ல
நாகரிக மாகயிவர் தாமும் நடந்து 157

சந்திர சேக ரநாயினார் முன்பிலே வைத்து – இவர்
சாஷ்டாங்க மாய்விழுந்து தாமும் எழுந்து
அந்திவண்ணர் பண்ணையம் விசாரணை செய்ய – வந்த
ஆண்டவனை வலம் வந்து கும்பிடு கிறோம்
செந்திரு வுலாவுந்திரு நாகமலையார் – அடிமை
சேவுகம் சேவுகம் வந்து தெண்டனிடுறோம்
“சிந்தை மகிழ்ந் தெம்மை யாதரித்து ரட்சியும்” – என்று
சீர்பாதம் தொழுதவர் முன்பிலே நின்றார் 158

18. பண்ணைக்காரன் கோபித்து மூத்தமள்ளியை அழைத்து வரச் சொல்லுதல்

முடுகு

காத்திடும்என் றிவர்தொழுதுவந்து நிற்கவும் – பண்ணைக்
காரனும் சினந்த கோரமாய் அவன்முகம்
பார்த்துநீ யிந்தத் தில்லுமல் லேதடா பள்ளா – மூத்த
பள்ளியெங்கே பாசாங்குக் கள்ளியெனவே
நேற்றுவந்த கச்சக்காச் சிறுக்கியுடனே – கூடி
நேமகம தாகவந்தாய் ஆமடா பள்ளா
மூத்தவள் விவேகியவள் தன்னையும் விட்டே – எந்தன்
முன்பிலே நில்லாதேபோ அழைத்துவா போடா 159

தணிவு

சதாசிவ மள்ளனார் மூத்தமள்ளி சிவகாமியை அழைத்து வருகிறேன் எனல்

நல்லது புத்தியாகட்டும் அழைத்துவாறேன் – என்னை
நன்மைசெய்து ரட்சியும் விரோத மெனவே
சொல்லும் அவள் சாடிக்கி சைந் தென்னை விருதா – அவ
தூறுக்கிடஞ் செய்யாமல்என் னாளும் பரிவாய்
அல்லவர்க்கு மேன்மை செய்யும் ஏளிதம்வரா – மலும்
அன்புவையும் உங்கள்அப் பணைப்படிக்கு நான்
இல்லந்தனி லேயிருக்கும் மூத்த பள்ளியை – நானும்
இச்சணம் அழைத்துவாறேன் என்று நடந்தான் 160

விருத்தம்

19. மூத்தமள்ளத்தியார் சிவகாமியை அழைத்துவர சதாசிவக்குடும்பனார் மாமன் வீடு வருதல்

பண்புமிகும் நாகமலைக் கடவுளார்தம்
பண்ணைவிசா ரிக்கவந்தார் சொல்படிக்கு
அன்பொடுச தாசிவப்பள் ளனும்சிரங்க
அரிவைதனை மனையதனுக் கனுப்பிவிட்டு
வன்புசெய்த மூத்தபள்ளி தனையழைத்து
வருவமென்று மாமன்மனை தனக்கு வந்தான்
இன்பமுடன் மனைவிதனைக் கண்டுபள்ளன்
இதமுடனே பேசியவள் முன்னின்றானே 161

விருத்தம்

சிவகாமியின் வருத்தமும் குடும்பனாரின் வேண்டுதலும்

வந்தவளின் முன்புநிற்க மாதுநல்லாள் தன்மகிழ்நன்
நிந்தனைகள் செய்தவெல்லாம் நினைந்துநெடு மூச்செறிந்து
பைந்தொடியும் தன்விரலைப் பார்த்துமொழி பேசாமல்
இந்திரை போல் நிற்கவும்முன் னேகுடும்பன் கூறினனே 162

சதாசிவக் குடும்பனார் கொஞ்சல்

கலிப்பா

மப்பிட்டாள் லாகிரிபெண்
வஞ்சனையென் னாளுமில்லை
துப்பிட்டேன் மால்இளையாள்
தோதகம்உண் டானதிது
செப்பிட்டேன் வாய்திறந்து
தேன்மொழிகூ றென்முகம்பார்
கொப்பிட்ட காதுக்கு நான்
கூப்பிட்டால் கேளாதோ?

விருத்தம்

சிவகாமியின் மறுமொழி

கணவன்ஈ துரைக்க மாது
கலகலென் றலுக்கி நின்று
மணமிகும் மலர்வி ரிந்த
வாறுபோல் வாய்தி றந்து

குணமுமான் பஞ்ச வர்ணக்
குயில்தொனி மொழிக ளாலே
மணியுதிர்ந் திடச்சிங் கார
வார்த்தைகள் பலுக்கின் றாளே 164

**சிவகாமி மள்ளி குடும்பனாரின் வஞ்னையை நினைவு கூறல்**

சிந்து (முடுகு)

சுருதி சேர்பணி மாமலை மேவிய
சுந்த ரானந்தர் பண்ணை யந்தன்னிலே
அருமை யாய்அவர் திருவரு ளால்மெத்த
அதிக பாக்யவை போகம தாகவும்
பெருமை யாகவும் வாழ்ந்திருந் தோம்எந்தன்
பேச்சில் லாமல் தனிவழி யேகியே
மருவு சிரங்கப் பள்ளியைக் கொண்டெடன்னை
வஞ்சித் தாசைமறந்தாயே பள்ளா 165

**சதாசிவக் குடும்பனார் சிவகாமியை அழைத்தல்**

தணிவு

அடி:- அன்ன மேயினி என்செய்கு வேன்நம
தாண்டவர்செயல் தாரமி ரண்டெனக்
கென்ன வேசெய்த கற்பனை யாலே
இளைய பள்ளியைக் கொண்டது நானே
என்ன மோஒரு மாய்கையி னாலிருந்
தேநான்உன்னை விட்டுப்பிரிந் தேன்இனி
உன்னை யேத்த மென்றெண்ணி னேன்வந்
துறவு கூடத் தயவுசெய் பெண்ணே 166

**சிவகாமி மள்ளத்தியார்**

முடுகு

பள்ளா: - நிற்கும் நேர்மையும் நிலைமையும் என்னுட
நீதி தானும் அறிந்திடு காமலும்
தக்க தெய்வ ஸ்ரீபதனி லேவிரல்
தந்தவன் ஈன்று தானும்என் ணாமலும்
நக்க னார்தமத் தேர்வையில் லாமலும்
நம்பி னாளென்று தான்மதி யாமலும்
பக்கு வந்தன்னில் என்னை முடுக்கி
பரத வித்திடச் செய்தாயே பள்ளா 167

**சதாசிவக் குடும்பனார் பொறுதிட வேண்டுதல்**

தணிவு

அடி: - எந்த னாருயி ரேமயி லேமதி
ஏழை போனேன்என் குற்றம் பொறுத்திடும்
சந்த்ர சேகரப் பண்ணையி னார்வந்து
தான ழைக்கிறார் போகாதே போனால்
எந்தன் மீதினில் கோபஞ்செய் வார்மெத்த
ஏச வார்சின்ன மேசெய் திடாதே
இந்த வேளைக் கிரங்கப கீர்த்திக்
கிடஞ்செய் யாதே ஈனமுனதே 168

**மூத்தமள்ளி சிவகாமி கூறல்**

கலிப்பா

சித்திதருந் தென்கோதைத் தேவர் அருளே மிகுந்த
சத்யவதி யென்றெனையும் சற்றுமெண்ணிப் பாராமல்
மெத்தமனம் நோகவைத்து வேளைகண்டு சங்காத்தம்
இத்தனையேன் சொல்லுகிறாய் இனியான் வருவதில்லை169

**சதாசிவக் குடும்பனார் வணக்கமும்**
**சிவகாமி மள்ளத்தியார் பிணக்கமும்**

சிந்து

அணங்கர சேவந்த அதிகாரி நயினாரை
வணங்கியே சேவித்து வருகலாம் வாடி 170

வாடியென்றென்கிட்ட வருகாதே யிளையவள்
சாடிக் கிசைந்து சதிசெய்த பள்ளா 171

செய்ததெல்லாம்பொறுத் தெந்தனை யாளுமுன்
கைவச மாயினேன் கடைத்தேறப் பாராய் 172

பாராமல் என்னையும் பாதகஞ் செய்திந்த
ஊரார் சிரிக்க உடம்பெடுத் தாயே 173

உடம்பெடுத் தேன் அந்த ஊதாரி யால்உந்தன்
உடன்பகைத் தேன் என் உயிர்த்துணை மாதே 174

உயிர்த்துணை யாமென் றுகந்திருந் தேன்என்னை
அயல்க்கடை யாக்கி அவதி கொண்டாயே 175

கொண்டவ் னையிந்தக் கோரணி செய்வது
உண்டோ சண்டைகள்வழக் குலகத்தில் இலையோ?176

உலகத்தில் உண்டுநம்போல் ஒருவரை யும்காணேன்
நலமுற்றும் சரியாய் நடத்துவா ரிலையா 177

நடத்துவேன் உன்னையும் நலமாய் வைத்திருப்பேன் நீ
சடுத்தமாய்ப் பாய்ந்து தனித்தாயே பள்ளி 178

தனிக்காமல் எந்நேரம் சக்களத்திப் போராய்
இனத்தார் நகைக்க இருக்கவோ பள்ளா 179

இருக்காமல் போய்விட்டு என்னையே தூஷித்து
நெருக்கமாய்ச் சொல்வது நீதியோ பள்ளி 180

நீதியாய் வைத்தெனை நிர்வாகம் செய்ததும்
போதும்வீண் பேச்சையேன் போக்குறாய் பள்ளா 181

போக்காதே என்முன் புத்திவந் ததுஉனக்
கேற்கையாய் நடக்குறேன் ஏதில்செய் யாதே 182

ஏதுக்கு என்னையும் இன்னமும் கூட்டிப்போய்
வாதைக் கிடஞ்செய்து வைக்காதே பள்ளா 183

வாதைக் கிடமில்லை வைகோலம் வேண்டாம்இப்
போதிரங் கினால்மெத்தப் புகழுனக் காமே 184

கல்லாகி னுஞ்சற்றே கனியுமெ னைக்கண்டால்
வல்லிரும் புன்மனம் மாய்மாலப் பள்ளா 185

இரும்பென்று சொல்லாதே இளகினேன் அனுதினம்
கரும்பென வேஉனைக் கருதுவேன் பள்ளி 186

கருதுவோ மென்றாலும் காந்தாரியினை யவள்
அருகினில் சென்றமேல் அன்றைக் கேதேதோ 187

அன்றுமின் றும்வார்த்தை அழியேனான் இதுமொழி
நின்று நிர்ணயமென நீநம்பி வாடி 188

வருவேன்நான் உனைநம்பி வந்ததன் மேலின்னம்
சிறுமை செய் வாயோ செய்வாயோ பெருமை 189

பெருமைசெய் வேன்இனிப் பிசகில்லை வாடியுன்
அருமை யறிந்துன்னை யாளுவேன் பெண்ணே 190

ஆண்டவன் செங்குன் றையர்க டாட்சங்கள்
பூண்டிரு வோரங்கே போவோம்வா பள்ளா 191

போயவர் கருணையால் புகழ்நயி னாரைக்கண்
டேயவர் செங்கோட்டில் இருக்கலாம் வாடி 192

**சதாசிவ மள்ளரும் மூத்த மள்ளத்தியாரும்**
**திருச்செங்கோடு வருதல்**

விருத்தம்

மகிணனீ துரைக்க மாது
மனமகிழ்ந் திடத்தாய் தந்தை
அகமகிழ்ந் திடவு ரைத்து
அனுப்பிடக் கொழுநன் பின்னால்
சுகமென நடந்து வந்து
தோகையில் லிடமும் சேர
வகையுட னிளையாள் வந்து
வணங்கிட மகிழ்ந்தாள் மாது 193

**20. சதாசிவக் குடும்பனார், சிவகாமி மள்ளி,**
**அபிராமி மள்ளி மூவரும் பண்ணைக்காரனைக் காணுதல்**

மாதுசி ரங்க வல்லி
வன்மைசேர் குடும்பன் மூத்த
காதலி இவர்கள் மூவர்
கலந்துமே கூடிக் கொண்டு
நாதனார் பண்ணை வேந்தர்
நலமிகு கொலுமுன் வந்து
நீதியாய்த் தொழுதி றைஞ்சி
நின்றுதான் கும்பிட் டாரே! 194

சிந்து

கும்பிடுகிறோம் ஆண்டே கும்பிடுகிறோம் - எங்கள்
குடும்பனும் நாங்களுமாய்க் கும்பிடுகிறோம்
அன்புள்ள தயாநிதியைக் கும்பிடுகிறோம் - பண்ணை
ஆண்டவனை வலம்வந்து கும்பிடுகிறோம்
சம்பிரமை யுள்ளவரைக் கும்பிடுகிறோம் - பள்ளர்
தங்களுக் கதிபதியைக் கும்பிடுகிறோம்
இன்பமுடன் மூவர்களும் கும்பிடுகிறோம் - எங்கள்
எசமான் அடிதொழுது கும்பிடுகிறோம் 195

தவமேன்மை யுள்ளவரைக் கும்பிடுகிறோம் - நல்ல
தர்மமிகு புண்ணியரைக் கும்பிடுகிறோம்
சிவநெறி யுள்ளவரைக் கும்பிடுகிறோம் - சைவ
சிலமி குந்தவரைக் கும்பிடுகிறோம்
நவநிதி பெற்றவரைக் கும்பிடுகிறோம் - இந்த
நாட்டுக் குடையவரைக் கும்பிடுகிறோம்
விவர குணநிதியைக் கும்பிடுகிறோம் - பண்ணை
வேந்தர் பதம் தொழுது கும்பிடுகிறோம் 196

**21. வளமை செறி மோரூர் மள்ளர் மள்ளியர்களை**
**அழைத்தல்**

எண்சீர் விருத்தம்

பள்ளனும்பள் ளியருடனே வந்து போற்றப்
பண்ணையினார் கோல்காரன் தனையும் பார்த்து
உள்ளமகிழ்ந் "திவ்வூரில் பள்ளர் பள்ளி
ஒருவரிலா மற்படியிங் கழையும்" என்ன
வள்ளல்மொழி கேட்டவன்போய் அழைத்த பின்பு
வளமை செறி மோரூரில் வாழ்ந்திருக்கும்
மள்ளர்கள் பள்ளிய ருடனே கூடிவந்து
மன்னவரைத் தொழஅவரும் மகிழ்ந்து சொல்வார் 197

சிந்து

அண்ணலார் அருளில்வந்து பண்ணையினாரும் - கூடி
அங்கனே வந்திடும்பள்ளிப் பெண்களுடைய வண்ணமுகம்
பார்ப்பார்சற்றே எண்ணியோசிப்பா - பெண்கள் -
வளப்பம்யோ சனைசெய்திடல் இளப்பமென்பார் 198

காத்திமகள் மூர்த்திதன்னைத் தூற்றிவைகுவார் - அந்தக்
கன்னிமகள் பொன்னியுடனே சன்னைசெய்வராம்
நாற்றிசை யுலாத்தி முத்தியைப் பேர்த்தி யென்பராம்சின்ன
நல்லி மகள் செல்வியைக் கண்டு கல்லிசொல்வாராம் 199

குஞ்சிதங்கை நஞ்சியுடனே கொஞ்சிமொழிவாராம் - பள்ளக்
கோவிந்தன் பெண்சாதி மாரியை மாவிந்தை யென்பாராம்
வஞ்சி மூத்தபள்ளியைக் கண்டஞ்சி நிற்பாராம் - சொன்ன
வார்த்தையெல்லாம் பார்த்துவெகு நேர்த்தி யென்பாராம் 200

இளையபள்ளி பழையனூறான் என்று சொல்வராம் - பசப்
பெத்தியை முடுகா ரென்று உற்றுப்பார்ப்பாராம்
வளமிகுந்த அழகியைக் கண்டுள மகிழ்ந்துதான் - இட்ட
வாடியிங்கே புகைச்சுருட்டுத்தாடி யென்பாராம் 201

**22. பண்ணைக்காரன் சதாசிவக் குடும்பனாரிடம்**
**வரலாறு கேட்டல்**

அறுசீர் விருத்தம்

மைப்பெரு மிடற்றார் பண்ணை வள்ளலார் பண்ணைக் காரன்
இப்படிப் பள்ளிமாரோ டேசர சங்கள் பேசி
அப்புறம் இவர்கட் கெல்லாம் அதிபனாம் குடும்பன் தன்னை
எப்படி வரலா றந்த இயல்பெல்லாம் கூறு மென்றார் 202

**பேர் விளங்கும் சதாசிவக் குடும்பனார்**
**தனது பிரதாபம் கூறவர் எனல்**

கலிப்பா

நேர்விளங்க நீதி நிலைமைவிளங் கன்பரிடம்
சீர்விளங்க நாளும் செயல் விளங்க ஞானமிகுந்(து)
ஊர்விளங்கச் செய்து செங்குன் றூர்விளங்கும் நாதர்திருப்
பேர் விளங்கும் பள்ளன் பிரதாபம் சொல்லுவனே 203

**குடும்பனார் தன் மள்ளர் குலப்பெருமை கூறல்**

சிந்து

**திருச்செங்கோட்டுச் சிவன் வந்த நாளிலிருந்து**
**வாழ்ந்து வரும் மள்ளர்**

நன்னாக வேணியரன் பன்னாக மேரில்வந்து
நதி கண்டிட உகந்து குதிகொண்டநாள்
பொன்னாடடெனும் பூந்துறை நன்னாடுண்டான காலம்
புகழ் பெற்றின்னாட் டினில்வந் துகமையுற்று
இந்நாகமேரிறைவர் தன்னாளவர் பண்ணையில்
இருந்து பயிர் வெள்ளாமை திருந்தச் செய்து
முன்னாளிதுவரைக்கும் என்னாலவரடிமை
முயற்சியென இருந்தங் குயற்சி பெற்றோர் 204

தொடரும் . . .

## ஈரோடு பெரிய அக்கிரகாரம்

# வாணியம்மன் கோயில் பண்ணாடி கல்வெட்டு

ஈரோடு அருகில் உள்ள பி.பெ. அக்கிரகாரத்தில் பழமை வாய்ந்த வாணியம்மன் கோயில் உள்ளது. ஈரோட்டுக்கும் பவானிக்கும் இடையே செல்லும் சாலையில் அமைந்துள்ளது. பவானி கூடுதுறையில் காவிரி ஆற்றுடன் இணையும் பவானி ஆறே வாணியம்மனாக மருதநிலமக்களால் தொன்று தொட்டு வழிபடப்பட்டு வருகிறது. இது குறைந்தது 800 ஆண்டு களுக்கு முன் தோன்றிய கோயில் ஆகும். பண்ணாடி மார்கள் தெருவில் இக்கோயில் அமைந்துள்ளது.

இந்தக் கோயிலை சுற்றியுள்ள ஊர்களான 1. வீரப்பண்ணாடியூர், 2. இராமநாதபுரம் புதூர், 3. தொட்டம்பட்டி, 4. வைராபாளையம், 5. வெள்ளோடு, 6. பள்ளிபாளையம், 7. கருங்கல்பாளையம், 8. லக்காபுரம், 9. சின்னியம்பாளையம், 10. அரச்சலூர், 11. பூந்துறை, 12. மன்னதாம்பாளையம், 13. கணபதி பாளையம், 14. பாசூர் முதலிய ஊர்களில் மருதநிலத் தலைமக்களான மள்ளர், தேவேந்திரர் எனும் பண்ணாடிமார்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறார்கள்.

வானி என்பது பவானி ஆற்றைக் குறிக்கிறது. ஆற்று நீர் பவானி கல்லணையால் தேக்கப்பட்டு காலிங்கராயன் வாய்க்கால் மூலம் வயல்களுக்குப் பாய்கிறது. வாணியம்மன் கோயில் ஈரோடு பி.பெ. அக்கிரகாரத்தில் வாய்க்காலின் மேற்குக் கரையில் பண்ணாடிமார்கள் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயிலில் வெளியே உள்ள பழைய வாணியம்மன் சிலையைப் பார்த்து முனைவர் மகேசுவரன் இக்கோயில் கி.பி. 10-12 ஆம் நூற்றாண்டுகளில் தோற்றுவிக்கப் பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார்.

இதே போல் ஈரோடு வயிராபாளையம் பக்கத்தில் உள்ள தேவேந்திரப் பண்ணாடிமார்கள் வசிக்கும் ஊராகும். வாய்க்காலுக்கு கிழபுரம் வயல்களின் நடுவே இராசாக்கள் கோயில் என்னும் மல்லாண்டை கோயில் உள்ளது. இக்கோயிலும் மள்ளர்களால் ஏற்படுத்தப்பட்டது ஆகும். கொங்கு நாட்டில் கரூரை சுற்றியுள்ள சோழூர் நாட்டில் 32 ஊர்களிலும் தேவேந்திர மள்ளர்கள் மல்லன் கோயில் கட்டித் தொன்றுதொட்டு வழிபட்டு வருகின்றனர். இவர்களின் வயல்களிலும் மல்லன் கோயில் என்னும் இராசாக்கள் கோயில்கள் உள்ளன. தேவேந்திரர்களுக்கு அங்கு மூப்பன் என்று பெயர். தமிழ்நாட்டின் அனைத்து மருதநிலப் பகுதிகளிலும் மூப்பன், பலகான், பண்ணாடி, குடும்பன், தேவேந்திர குலத்தான், வாய்காரர், பணிக்கர், கடையர், காலாடி எனப் பல பெயர்களில் தேவேந்திர மள்ளர்கள் நிறைந்து வாழ்ந்து வருகிறார்கள்.

பவானியாறு வாணியம்மனாக பி.பெ. அக்கிரகாரத்தில் தேவேந்திரப் பண்ணாடிமார்களால் வழிபடப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டம் புகலூர் கல்வெட்டு சேர மன்னர்களின் மூன்று தலைமுறைகளை கோஆதன் செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோன் என்று குறிப்பிடுவது போல் இக்கோயிலில் 300 - 400 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்ட ஒரு கல்வெட்டு பண்ணாடிமார்களின் மூன்று - நான்கு தலைமுறைகளைக் கூறுகிறது. கல்வெட்டுள்ள தூறிக் கல்தூணில் ஒரு ஆணின் சிற்பமும் ம்றொரு தூணில் அவரது துணைவியாரான ஒரு பெண்ணின் சிற்பமும் வடிக்கப்பட்டிருக்கின்றன. சிற்பங்கள் பழனிப் பண்ணாடி தம்பதியராக இருக்கலாம்.

கல்வெட்டு வாசகம்

வரி

| | | | |
|---|---|---|---|
| 1. விகா | 2. ரிஶ்ரீ | 3. தயிமீ | 4. உயஎக்கு |
| 5. செல | 6. ம்பப | 7. ண்ணா | 8. டி மக |
| 9. ன் வல் | 10. லடியப | 11. ண்ணாடி | 12. மகன் |
| 13. பழனி | 14. பன்னா | 15. டி கெ | 16. ா ங்க |
| 17. பன்னா | 18. டி தூரி | 19. க் கல்லு | 20. வாணிய |
| 21. ம்மனுக் | 22. கு உபை | 23. யம் | |

23 வரிகள் கொண்ட இக்கல்வெட்டு "விகாரி ஆண்டு தை மாதம் 27-க்கு செலம்ப பண்ணாடி மகன் வல்லடிய பண்ணாடி மகன் பீழனி பன்னாடி கொங்க பன்னாடி தூரிக்கல் வாணியம்மனுக்கு உபையம்" என்று கூறுகிறது.

இக்கல்வெட்டைப் படித்த ஈரோடு அருங்காட்சியகக் காப்பாட்சியர் முனைவர் சி. மகேசுவரன் இது 16 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டாக இருக்கும் என்கிறார். இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது பற்றி 5.3.2005 அன்றைய ஈரோடு தினத்தந்தியில் வந்துள்ள செய்தி வருமாறு

### "300 ஆண்டுகள் பழமையான கல்வெட்டு ஈரோடு அருகே கண்டுபீடிப்பு

ஈரோடு அருகே சுமார் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது 4 தலைமுறையினர்களால் உபயம் செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது.

**வாணியம்மன் கோவில்**

ஈரோடு - பவானி மெயின் ரோட்டில் பி.பி. அக்ரஹாரத்தில் 50 செண்டு நிலப்பரப்பில் வாணியம்மன் கோவில் உள்ளது. இது சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவில் ஆகும். அந்த கோவிலின் தொன்மையை அறிவதற்காக ஈரோடு அரசு அருங்காட்சியக காப்பாட்டிசியர் மகேஷ்வரன் அந்த கோவிலில் ஆராய்ச்சி நடத்த சென்றார்.

**தூரிக்கல்**

கோவில் முன்பு தூரிக்கல் அமைக்க 2 கல் தூண்கள் நடப்பட்டு இருக்கின்றன. அந்த கல்லை ஆராய்ச்சி செய்ய அடிபகுதி தோண்டி பார்க்கப்பட்டது.



அப்போது ஒரு கல்லின் அடியில் கீழ்பகுதியில் (மண்ணுக்குள் புதைக்கப்பட்டதில்) ஆண் உருவம், மற்றொரு கல்லில் பெண் உருவமும் இருந்தது தெரியவந்தது.

**23 வரிகள்**

இந்த சிறிய தூரி கல்லில் உள்ள எழுத்து வரிகள் பிரதி எடுக்கப்பட்டது. அதில் "விகாரி வருடம் தை மாதம் 28-க்கு செலம்ப பண்ணாடி மகன் வல்லடிய பண்ணாடி மகன் - பழனி பண்ணாடி கொங்க பண்ணாடி தூரிக்கல் வாணியம்மனுக்கு உபயம்" என்று மடித்து மடித்து எழுதப்பட்டிருந்தது.

**16 - ம் நூற்றாண்டு**

கோவில் திருப்பணிக்கு தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த கொங்க பண்ணாடி கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் திருப்பணி செய்து உள்ளது இதன் மூலம் தெரியவருகிறது. கல்வெட்டின் கீழ் உள்ள உருவங்களில் ஆண் உருவம் பழனி பண்ணாடியையும், பெண் உருவம் அவரது மனைவி என்பதையும் குறிக்கிறது. இந்த சிற்பங்கள் விஜய நகர மன்னர் நாயக்கர் கால பாணியில் செதுக்கப்பட்டு உள்ளது. நகைகள், உடைகள் கி.பி. 16, 17 - ம் நூற்றாண்டு காலத்தவை என்பதை உறுதிபடுத்துகிறது. கோவிலின் முன்பு வாணியம்மன் சிலை ஒரே கல்லில் புடைப்பு சிற்பமாக உள்ளது.



காப்பாச்சியர் முனைவர் சி. மகேசுவரன் கல்வெட்டைப் பார்வையிடுகிறார்.

இதுதான் கி.பி. 16 - ம் நூற்றாண்டில் மூலஸ்தான அம்மனாக வழிபட்டு வந்துள்ளது. 17 - ம் நூற்றாண்டில் கோவில் திருப்பணி நடந்தபோது இந்த சிலை கோவில் முன்பு வைக்கப்பட்டு விட்டு புதிதாக அம்மன் சிலை வைக்கப்பட்டு உள்ளது. இது அரக்கனை காலால் மிதித்து கொண்டு ஒரு கையில் சூலாயுதம் கொண்டு குத்துவது போல் உள்ளது. அத்துடன் அதன் அருகே வீரபத்திரன் அம்மன் சிலையும் வைக்கப்பட்டு வழிபடுத்தப்பட்டு வருகிறது. தற்போது அந்த தூரிக்கல் ஜம்பை புலவர் பழனியப்பனால் மை அச்சு படி எடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோவில் பற்றிய மேலும் தகவல்கள் கிடைக்கலாம் என்று கருதப்படுகிறது. அத்துடன் அந்த காலத்தில் பண்ணாடி கட்டளை இட்டாலே வாணியம்மனே நாத்து நட்டு அனைத்து பணிகளையும் செய்து விடும் என்பது புராண கதை கூறுகிறது. தற்போது தூரிக்கல்லில் காணப்படும் சிற்பங்களை அப்பகுதியினர் திரளாக வந்து பார்வையிட்டு வழிபட்டு செல்கிறார்கள்".

இக்கோயிலில் கிடைக்கப்பெற்ற ஒரு ஓலைச் சுவடி ஈரோடு தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்தில் சுவடி எண் 71/89 ஆகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்தச் சுவடியில் வாணியம்மன் கோயில் படிக்கப்பட்ட பதிகங்கள் பல எழுதப்பட்டள்ளன. அதில் உள்ள வாழி பதிகம் வருமாறு

**வாழி பதிகம்**

226458

இந்திரனும் அயிராணி இயல்புபெற வாழி
ஈசுபரனும் உமையவளும் இன்பமதாய் வாழி
சந்திரருஞ் சூரியருந் தயவுடனே வாழி
தாரணியில்த் திருமாலு மாதுமிக வாழி
கந்தருடன் வள்ளி தெய்வியானை மயில் வாழி
கரிமுகவன்மார்களும் வாழி அயன் வாழி
இந்த மகாநவமி தனில்ப் பத்தியங்கள் படிக்க
இன்பமதாய்க் கற்றவர்கள் கேட்டவர்கள் வாழி.

* * *

## முருகவேல்ராசன் மற்றும் 164 தேவேந்திரர் கைது

தேவேந்திர குல வேளாளர் என்று ஒட்டுமொத்த மள்ளர், குடும்பர், தேவேந்திர குலத்தார், பண்ணாடி, பலகான், மூப்பனார், கடையர், காலாடி என அனைத்து தேவேந்திர வம்சத்தாருக்கும் தேவேந்திர குல வேளாளர் என்று ஒட்டுமொத்த பெயர் வைக்க வேண்டும் முதலான 12 கோரிக்கைகளை வைத்து வந்தவாசி எம்.எல்.ஏ., முருகவேல்ராசன் பல மாவட்டங்களிலும் இரு சக்கர வண்டிப் பயணம் மேற்கொண்டுள்ளார். மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர், தூத்துக்குடி, இராம நாதபுரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் பயணத்தை முடித்துக் கொண்டு தேனி மாவட்டத்தில் நுழைந்தார்.

அமைதியாக நடைபெற்ற இந்த இரு சக்கர வண்டிப் பயணத்திற்கு தேனி மாவட்டத்தில் உசிலம்பட்டிக்குச் செல்ல காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் உசிலம் பட்டி தாசில்தார், அரசியல் தலைவர்கள் மற்றும் சாதித் தலைவர்களின் தூண்டுதலால் தடை விதித்தனர். அரசின் சனநாயக விரோதப் போக்கால், பயமுறுத்தல[illegible] தடையை மீறி தொடர்[illegible] 2005 அன்று நடத்[illegible].

226458

தடையை மீறி ஊர்வலம் நடத்தியதால் தேவேந்திர குல [illegible]ளைஞர் சங்கத் தலைவரும் வந்தவாசி எம்.எல்.ஏ.,வுமான முருகவேல்ராசனையும் மற்றும் அவருடன் வந்த 164 ஊர்வலத்தினரையும் கைது செய்து ஆண்டிபட்டி கொண்டு செ[illegible]றையின் இந்த அடாவடி நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. பிரச்சனை செய்து கலவரம் செய்ய முயலுபவர்களைக் கைது செய்வதை விடுத்து சனநாயக முறையில் கோரிக்கை ஊர்வலம் நடத்துபவர்களைக் கைது செய்வது திருடனை விடுத்துத் திருடு கொடுத்தவர்களைக் கைது செய்வது போல் உள்ளது.

# தமிழ்ப் பாதுகாப்பு ஊர்திப் பயணம் மூன்றாவது மொழிப்போர் அறிவிப்பு மாநாடு

## தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தினர் தமிழ் முதுகுடி மள்ளரை மறந்தது ஏனோ?

**2005** சனவரி 22 முதல் 26 வரை தமிழகத்தின் நான்கு திசைகளிலிருந்தும் திருச்சிராப்பள்ளியை நோக்கி ஊர்திப் பயணம் மேற்கொண்டு 26.3.2005 ஆம் நாள் திருச்சிராப்பள்ளி பொன்மலைத் திடலில் மூன்றாவது மொழிப்போர் அறிவிப்பு மாநாடு நடைபெற்றது.

சென்னையிலிருந்து கிளம்பிய தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் ச. இராமதாசுவின் பயணத்தை தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தொடங்கி வைத்தார். புதுச்சேரியிலிருந்து கிளம்பிய தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத் தலைவர் தொல் திருமாவளவனின் பயணத்தை புதுச்சேரி மாநில முதலமைச்சர் அரங்கசாமி தொடங்கி வைத்தார். கோபிசெட்டிபாளையத்திலிருந்து கிளம்பிய உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் பயணத்தை ம.தி.மு.க. தலைவர் தெலுங்கர் வைக்கோ தொடங்கி வைத்தார். கன்னியாகுமரியிலிருந்து கிளம்பிய மருத்துவர் சேதுராமனின் பயணத்தை கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் நல்லகண்ணு தொடங்கி வைத்தார். நான்கு திசைகளிலிருந்தும் கிளம்பிய ஊர்திப் பயணங்கள் மேற்கொண்டோர் பல ஊர்கள் வழியாகப் பயணம் செய்து 26.3.2005 அன்று திருச்சியில் மாநாடாகக் கூடினர்.

வன்னியர், பறையர், வேளாளர், முக்குலத்தோர் முன் நடத்தும் பல தமிழ்க் குடிகளின் பிரதிநிதிகளாகப் பலரும் விளம்பரப்படுத்தப்பட்டனர். ஆனால் மூன்று தமிழ்ச் சங்கங்கள் வைத்துப் பல ஆயிரம் ஆண்டுகள் தமிழை வளர்த்துப் பாதுகாத்து வந்த தமிழ் மூவேந்தர் மரபினராக மள்ளர், குடுமி, குடுமிச்சி, குடும்பனார், பண்ணாடி, பலகனார், மூப்பனார், காலாடி, வாய்க்காரர், பணிக்கர் எனும் தேவேந்திர குல வேளாளர், தமிழைப் பாதுகாப்பதில் முன்னிலை வகித்து அந்நிய மொழி ஆட்சியாளர்களால் கடந்த 500 - 800 ஆண்டுகளாக வீழ்த்தப்பட்டவர்கள். தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்திலும் இந்த மூன்றாவது மொழிப் போரிலும் முன்னிலை வகிக்க வேண்டும் என்றும் இந்த இயக்கப் பொறுப்பாளர்கள் எண்ணவில்லை. [illegible] மள்ளர்களின் பிரதிநிதிகள் இந்தப் போராட்டத்தில் பெரியவர்களுடன் பங்கு கொள்ள வேண்டும் என நினைக்கவில்லை. மாறாக இவர்கள் பங்கு கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது போல் இந்த மூத்த தமிழ்க் [illegible] பெரிதும் அந்த நிகழ்விலும், அழைப்பிதழிலும் சேர்க்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாக உள்ளது. வரலாற்றை மறந்து இவர்கள் வரலாறாக முடியுமா? தமிழ்நாட்டின் முப்பது மாவட்டங்களில் 23 மாவட்டங்களில் பெரிய சமூகமாக மொத்தம் ஒரு கோடிக்கும் மேல் உள்ள மூத்த மள்ளர் குடியை விலக்கி வைத்துவிட்டு மொழிப் போரில் வெற்றி பெற முடியுமா? இயக்கத்தின் பொறுப்பாளர்கள் சிந்திக்க வேண்டும்?

தமிழ் என்றாலும் தமிழர் என்றாலும் ஒன்றே. தமிழர் இல்லாமல் தமிழ் இல்லை; தமிழ்ப் பாதுகாப்பு என்பது தமிழர் பாதுகாப்பு. யாரிடமிருந்து தமிழைப் பாதுகாப்பது? தமிழ்ப் பகைவர்களிடமிருந்து தமிழைப் பாதுகாக்க வேண்டியுள்ளதா, தமிழரிடமிருந்து தமிழைப் பாதுகாக்க வேண்டியுள்ளதா, தமிழ்ப்பகைவர் என்போர் தமிழரா? அந்நியரா எனப் பல விஷயங்களில் பாதுகாப்பு இயக்கத்தினர் தெளிவு பெறவேண்டும். மொழிப் போர் தீவிரப்படுத்தப் படவேண்டிய அவசியமான போர். வரவேற்கிறோம்.

திருச்சி பொன்மலைத் திடலில் 26.3.2005 அன்று மாநாட்டில் பொது அரங்கில் பல தலைவர்களும் உரையாற்றினார்கள். பல துறைகளிலும் தமிழின் பயன்பாடு எப்படி என்று பல அறிஞர்கள் கருத்தரங்கில் உரையாற்றினார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## சோளகர் தொட்டி

பழங்குடி மக்கள் சங்கத் தலைவர் வழக்கறிஞர் ச. பாலமுருகன் எழுதிய "சோளகர் தொட்டி" என்னும் நூலின் திறனாய்வுக் கருத்தரங்கு 13.3.2005 அன்று சேலத்தில் பத்திரிகையாளர் மு. அந்தாலனார் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் தமிழடியான், கவிஞர் முல்லை மாணிக்கம், கவிஞர் தாதை [illegible], தலைமையாசிரியர் முத்துக்குமரன், ஆனையப்பன், பாவலர் எழுஞாயிறு ராமசாமி, செந்தாரன், பழ. சதாசிவம், திருகாந்தன் ஆகியோர் புத்தகத்தின் கருத்துக்களைத் திறனாய்வு செய்தனர். மலைவாழ் மக்களின் துயரங்கள், இன்னல்கள், அதிரடிப்படையின் வன்கொடுமைகள் அனைத்தும் அடங்கிய நடப்பியல் இலக்கியம் சோளகர் தொட்டி எனக் கூறலாம்.

Printed by Mrs. Thulasimani Mariappan and Published by Dr. Guruswami Siddhan on behalf of Devendra Kula Velalar Sangham and Printed at Mas Mannar Achakam, 10/2A, Nalvar Nagar, Coimbatore - 641 046 and published at 10/2, Nalvar Nagar, Coimbatore - 641 046. Editor : Dr. Guruswami Siddhan

செய்தித்தாளாக பதிவு செய்யப்பட்டுள்ளது பாரதியார் பல்கலைக்கழக அஞ்சலகத்தில் ஒவ்வொரு மாதமும் 10 & 11 தேதிகளில் சேர்க்கப்படுகிறது

அனுப்புநர் :
பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்,
ஆசிரியர், மள்ளர் மலர், 10/2 நால்வர் நகர், பாரதியார்
பல்கலைக் கழகம் அஞ்சல், கோயமுத்தூர் - 641 046.

பெறுநர்:
உயர்திரு

Member ID: 2479

THE DIRECTOR
CHIVES & HISTORICAL RESEARCH
- 29, GANDHI - IRVIN ROAD
GMORE
HENNAI 600 008

